Nallur Branch Library

Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை: ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

[illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 09 ( 24-12-93 ) வெள்ளிக்கிழமை ஓசை 309

## பட்டதாரி பயிலுநர்களை நிரந்தரமாக்க தீர்மானம்

சேவையிலுள்ள பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களையும், பட்டம்பெற்ற வேறுவகையைச் சேர்ந்த ஆசிரியர்களையும் நிரந்தரப் பட்டதாரிப் பணியில் சேர்த்தல் தொடர்பாக அமைச்சரவை தீர்மானம்எடுத்துள்ளது. 1993-06-01 அன்று ஓராண்டு காலச் சேவை நிறைவுசெய்கின்ற பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதென்றும்தற்பொழுது சேவையிலுள்ள பட்டதாரிச் சம்பளம் பெறாத ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் (12ஆம் பக்கம் பார்க்க)

# தப்பிஓடியபடையினரால் பாதுகாப்பிற்கு ஆபத்து!

## தேடுதலைத் தீவிரமாக்குமாறு பொலிஸாரிடம் கோரிக்கை

(கொழும்பு)

**இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படையினரால் நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல் உருவாகியுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து தப்பிஓடிய படையினரைத் தேடும் பணியைத் தீவிரமாக்குமாறு பொலிஸாரிடம் பாதுகாப்பு வட்டாரங்கள் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

கடந்த காலங்களில் சுமார் 131 அதிகாரிகளும், 22,647 சிப்பாய்களும் இராணுவத்திலிருந்து தப்பிஓடி தலைமறைவாகியிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த காலங்களில் புலிகளின் அதிரடித் தாக்குதல்களால் இராணுவத்திலிருந்து தப்பிஓடுவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பி ஓடி தலைமறைவாகியபடையினர் பல்வேறுகுற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுஇதுஅரசாங்கத்திற்குப் பெரும் தலையிடியை உருவாக்கியுள்ளது. மேலும் இது சிறிலங்காவின்பாதுகாப்பிற்கு குந்தகமானது என அரசு கருதுகிறது இதனால் அவர்களை தேடிக்கண்டுபிடி

(11ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தினங்கள் படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும், நாளையும், நாளை மறுதினமும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## தபால்கள் செல்லவில்லை

பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்துநேற்றுமாலை

(11ஆம் பக்கம் பார்க்க)

யாழ். குடாநாட்டில் மட்டும்

## 57ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிப்பு

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டில்பெய்த பெருமழையினால் ஐம்பத்தேழாயிரத்து 326 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர்கள் கொடுத்த விபரத்தின்படி தெரியவந்துள்ளது

நேற்று வெள்ளப்பாதிப்புகள் தொடர்பாக யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு தத்தமது பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை அவர்கள் சமர்ப்பித்தார்கள்.

இதன்படி யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 6158 குடும்பங்களும், நல்லூரில் 7657 குடும்பங்களும் தெல்லிப்பழையில் 932 குடும்பங்களும், கோப்பாயில் 7956 குடும்பங்களும் கரவெட்டியில் 1676 குடும்பங்களும், பருத்தித்துறையில் 2363 குடும்பங்களும், மருதன் கேணியில் 220 குடும்பங்களும், சாவகச்சேரியில் 13000 குடும்பங்களும், சண்டிலிப்பாயில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகளை ஏற்றிச் செல்ல கப்பல்கள் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் நோயாளிகளை கொழும்பிற்குக் கொண்டுசெல்வதற்கு கப்பல் கொம்பனிகள் மறுத்துள்ளன இதனால் நோயாளிகள் பலர் பெரும் பாதிப்புக்குள்ளாகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது

மேற்படி கப்பல் கொம்பனிகள் தமது கப்பல்கள் சரக்குக் கப்பல்கள் எனவும் அதில் பயணம் செய்யும் பயணிகளுக்கு காப்புறுதி எதுவும் இல்லாததால் நோயாளிகளை கொண்டு செல்லும் போது அவர்களுக்கு ஏதாவது நிகழ்ந்தால் அதனால் தாங்கள் பெரும் சிக்கலை எதிர்கொள்ளவேண்டி வருமெனவும் அவர்கள் தெரிவித்ததாக தெரியவருகின்றது. (சி)

## தம்மைக் காப்பாற்றுமாறு கடத்தப்பட்ட உறுப்பினர் கோரிக்கை

தென்மாகாண சபையின் கூட்டத் தொடர் எதிர்வரும் 29ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது'

தென்மாகாண சபையின் பொது மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான பிரான்சிஸ்கோ கடத்தப்பட்டதைத் தொடர்ந்து இவரது ஆசனம் வெறுமையாக காணப்பட்டது

கடத்தப்பட்ட பிரான்சிஸ்கோ தம்மைக் காப்பாற்றுமாறு சபைத் தலைவரை தொலைபேசி மூலம் கேட்டதாக தெரிய வருகிறது இவரது கடத்தலின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் இருப்பதாக தென்மாகாண சபையின் ஆளும் கட்சியினர் பகி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்மாகாணசபை கூட்டம் 29-ம்திகதிவரைஒத்திவைப்பு

(கொழும்பு)

தென்மாகாண சபையின் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனஅறிவிக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது சபையில் ஒழுங்கை நிலைநாட்ட முடியாது என்பதனால் சபையை ஒத்திப்போடுவதென சபைத் தலைவர் தீர்மானித்துள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை விடைத்தாள்கள் அனுப்புவதில் தாமதம்

சென்ற 15ஆம் திகதியுடன் முடிவடைந்த க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்கள் கொழும்பிற்கு எடுத்துச் செல்வதில் மேலும் தாமத நிலை தோன்றியுள்ளது.

தற்சமயம் யாழ் குடாநாட்டில் நிலவிவருகின்ற கால நிலை சீரின்மையினால் இவ்விடைத்தாள்களைக் கப்பலில் எடுத்துச் செல்ல முடியாதிருப்பதாகவும்காலநிலை சீராகும் பட்சத்தில் அடுத்து இங்கிருந்து கொழும்பிற்கு புறப்படுகின்ற கப்பலில் இவை எடுத்துச் செல்லப்பட

(11ஆம் பக்கம் பார்க்க)

## தோட்டத்தொழிலாளர் போராட்டம் அரசாங்கத்திற்கு பெரும் அச்சுறுத்தல்

### மாகாணசபை கூட்ட ஒத்திவைப்பிற்கு இதுவேகாரணம்

மத்தியமாகாண சபையின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏழுபேர் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா அரசு பதற்றமடைந்துள்ளதாக 'யுக்திய' ஆசிரியரான சமன் மத ஆராட்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றின்போது இந்த 7பேரும் கடத்தப்பட்டதை அடுத்து மலையக தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இவர்களது வேலை நிறுத்தமும், அரசின் பதற்ற நிலைமையுமே மத்திய மாகாண சபையின் கூட்டத் தொடர் ஒத்திவைப்பதற்கான அடிப்படைக் காரண

(12ஆம் பக்கம் பார்க்க)

இராணுவம் விதித்துள்ள தடையினால்

## திருமலை பூநகர் கிராமத்துடன் 21 நாட்களாக தொடர்பு துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பத்தை பூநகர் என்ற கிராமத்துக்குச் சிறிலங்கா இராணுவத்தினர் பல தடைகளை விதித்துள்ளனர்.

பூநகர் - பூமரத்தடிச் சேனைக் கிராம மக்கள் அக்கிராமத்தை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல முடியாதவாறு சிறிலங்கா இராணுவத்தினர் தடைகளை விதித்துள்ளனர். வெளியிடங்களில் பொருள்கள் கொள்வனவு செய்யவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் உணவுப்பொருள்கள் இன்றிப் பசியால்வாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அப்பகுதி மக்கள் தங்கள் தொழிலான விவசாயத்தைச் செய்வதற்கும் தடை போடப்பட்டுள்ளது. விளைந்த வேளாண்மையைப் பராமரிப்பதற்கும்

(11 ஆம் பக்கம் பார்க்க )

## செல்லச்சாமிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை

### இ. தொ. கா. தீர்மானம்

அமைச்சர்செல்லச்சாமிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

மேற்படிகாங்கிரஸ்மாநாடு எதிர்வரும் இரண்டாம்திகதி நடைபெறும்போது இத் தீர்மானம் பற்றி விவாதிக்கப்படமாட்டாது எனவும் இதற்கு அடுத்த கூட்டத்திலேயே இது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாமைட்,வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜாம்,புரோட்டீனெக்ஸ்.பியர் கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ். (தனி) லிமிட்டெட் 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சி 8054)

### உணவு சேவை

புரியாணி, நூடில்ஸ்வகை, சூப்வகை, (f) பிறைட்றைஸ், சிக்கன் 65, ரோல்ஸ்,கட்லட், etc. etc etc. -பரிமாறுசேவை உடன் நாடவும், காருண்யா சைனீஸ் ஹொட்டேல் இல. 166, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6957)

### இறைச்சிக் கோழி

புறொய்லர் இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு தேவி நகை மாளிகை பிரதான வீதி பருத்தித்துறை (6977)

### "நீம் சுகாதாரதூபம்"

நீம் தூபம் நித்தம் புகைப்பதால் நுளம்புத் தொல்லை எமக்கில்லை. இரவில் நிம்மதியாக உறங்குகிறோம். சுகந்த வாசனை கொண்டது அண்ணா கோபி கடைகளிலும் விற்பனையாகிறது. பக்கற் விலை ரூபா 3/-. 25 பக்கற் கொண்ட அட்டை ரூ 60/- மில்க்வைற் (சி 8178)

### தாமரைச் செல்வி எழுதிய "தாகம்"

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு "தாகம்" இருக்கத்தான் செய்கின்றது அந்த தாகம் தான் எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் அவர்களை இயக்கிக் கொண்டிருக்கிறது. அருமையான நாவல் "தாகம்", படித்துப் பாருங்கள். (6998)

### தேவை

டெனியன், சோட்ஸ்,தைப்பதற்கு அநுபவமுள்ளவர்கள் தேவை தொடர்பு! ஜெகா தையலகம்.729 கே, கே.எஸ். வீதி. யாழ் நகர். 7004

### பரீட்சை பிற்போடப்பட்டது

கடந்த 20ஆம் திகதி நடைபெறவேண்டிய கணக்காளர் 1/11 தரத்திற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. இப்பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள அனுமதி அட்டை அப்பரீட்சைக்குச் செல்லுபடியாகுமெனவும் பரீட்சை ஆணையாளர் யாழ் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார். (சி)

### சந்திக்கவும்

பிற மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் தங்கியிருந்து பின் அம்மாவட்டங்களுக்குத் திரும்பிச் செல்லாத ஆசிரியர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்திற்குச் சமூகமளித்து தம்மை நேரடியாகச் சந்திக்கும்படி யாழ். கல்விப் பணிப்பாளர் செல்வி திருமதி பெரியதம்பி கேட்டுக்கொண்டுள்ளார்.

# நினைவு கூருகின்றோம்..

## 1993-12-24

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் மணலாறு, ஒதியமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**அன்சராஸ்** (நமசிவாயம் கலையரசு - தென்னன் மரவடி - திருமலை)

**விக்கி** (கந்தையா ரவீந்திரன் - திரியாய் - திருமலை)

**தீசன்** (நல்லதம்பி விஜேந்திரன்- திரியாய்-திருமலை)

**இடிஅமீன்** (கணபதிப்பிள்ளை சிவலோகநாதன் - முல்லைத்தீவு வீதி, நெடுங்கேணி - மணலாறு)

**ரவி** (கனகராசா விக்னேஸ்வரன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**வெள்ளை** (இ. சற்குணநாதன் - முள்ளியவளை- முல்லைத்தீவு)

**சந்துரு** (யோசப் பொன்னுத்துரை டொன்பொஸ்கோ - ஓமந்தை - வவுனியா)

**லெப். காண்டீபன்** (எல்.பி சுப்பிரமணியம் சிறிஸ்கந்தராசா - குமுழமுனை - மணலாறு)

1985ஆம் ஆண்டு கல்லடி முகாம் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு-

✻ **சத்தியன்** (எஸ். யோகராசா - கொம்மாந்துறை - மட்டு)

வந்தாறுமூலைப் பகுதியில் அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் சகாதேவன்** (தர்மலிங்கம் கோகுலநாதன் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

1986ஆம் ஆண்டு மட்டு - தாழங்குடாப் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**லத்தீப்** (முகம்மது அலியார் முகம்மது லத்தீப்- காத்தான்குடி - மட்டு)

**நரேன்** (ஏபிரகாம்லிங்கன் விஜயசுதன் - 3-ம்குறுக்குத்தெரு, பாஷையூர் - யாழ்)

மட்டு - ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**சுது** (சதானந்தன் நிர்மலநாத் - அரியாலை- யாழ்)

1987ஆம் ஆண்டு காரைநகரில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த-

**சேரன்** (கண்ணன் - கீரிமலை வீதி, சித்தன்கேணி- யாழ்)

1988ஆம் ஆண்டு கல்மடுவில் இந்தியப்படையினரின் மிதிவெடியில சிக்கியதில் வீரச்சாவெய்திய-

**கூர்க்காஸ்** (அருள்பிரகாசம் நிக்சன்போல்- உருத்திரபுரம் - கிளிநொச்சி)

தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உணவகப் பொறுப்பாளர்,

**சந்திரகுமார்**

1990ஆம் ஆண்டு குப்பிளான் பகுதியில் வீரச்சாவெய்திய-

**ஜீவா** (மஞ்சுளா சிவபாதம் - செட்டிக்குளம்- வவுனியா)

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் விழுப்புண் அடைந்து யாழ்—போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**நளினிகாந்தி** (கவிதா பழனிநாதன் - கொக்குத்தொடுவாய்-மணலாறு).

1991ஆம் ஆண்டு மணலாறு, கொக்குத்தொடுவாய், கோவில்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**லெப். ராதா/தமிழரசன்** (சிவஞானம் கண்ணன் 35-ம் கிராமம்-மட்டு.)

**2-ம் லெப். நிருசுதா** (சுகிலாதேவி சுப்பிரமணியம்-வட்டக்கச்சி-கிளிநொச்சி).

புன்னாலைக்கட்டுவன், ஈவினைப்பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**கப்டன் வாணன்** (சண்முகலிங்கம்மோகனகுமார்- உரும்பராய் கிழக்கு-யாழ்.)

**சீராளன்** (முருகேஸ்வரன் வரதன் (ரஞ்சன்) பலகாடு, காரைநகர்-யாழ் )

**இளம்பரிதி/ராவ்** கைலாயநாதன் சிவகணேசன்- சிவன்பண்ணை வீதி, கொட்டடி-யாழ்.)

அச்சுவேலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சந்துரு** (செல்லையா சுகுமார்-ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளி-யாழ்.)

ஐயங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால்சுட்டுக்கொல்லப்பட்டநாட்டுப்பற்றாளரான,

**சி. நிதி** (ஐயங்கேணி)

**த. பீதாம்பரம்** (ஐயங்கேணி)

1992ஆம் ஆண்டு மணலாறு - கொக்குத்தொடுவாய் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ அணிமீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**லெப்.மருதன்-வித்திரா** (மாணிக்கப்போடி அருட்சிவம்-முனைக்காடு, மட்டு)

**லெப்.இளங்கோ** (உலகசேகரம் உமாகுலேந்திரன் ஐயங்கேணி மட்டு)

**கப்டன் சுரேந்திரன்** (ஆனந்தசாமி ஆனந்தராஜ் அன்புவழிபுரம்-திருமலை)

**லெப். அமுதன்** (சடையன் தர்மலிங்கம்-பன்குளம் திருமலை)

**கப்டன் கல்கி** (ருக்குமணி தாமோதரம் - 2-ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

**மேஜர் செங்கோலன் /செங்கோல்** (பொன்னுத்துரை பால முருகேசு சங்கத்தார்வயல்,இயக்கச்சி)

**லெப். விதுரன்/விதுரராசன்** (கதிரவேல் கவந்த தீசன்-அல்வாய் தெற்கு, கரவெட்டி-யாழ்)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

✻ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/8192)

யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர்
**கப்டன் என். சோமசுந்தரம்**
அவர்களின்

## மணிவிழா

காலம்: 26.12–1993 ஞாயிற்றுக்கிழமை
இடம்:- யாழ். இந்துக் கல்லூரி

நிகழ்ச்சிகள்:

பி. ப. 2-00மணி:- கண்காட்சி உதைபந்தாட்டம்

மாலை 4-00மணி;- விழா நாயகர் ஊர்வலமாக அழைத்து வரப்படும்

மாலை 5-00மணி;- விழா ஆரம்பம்

அனைவரும் அன்புடன் வருக!

யாழ் இந்துக் கல்லூரி. (சி-8204)

செயலாளர்
மணிவிழாக் குழு

அனைத்துலகப்பெண்கள் நாளை முன்னிட்டு
விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெணகளுக்கான இலக்கிய, ஓவியப்போட்டிகளை நடாத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்தவகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:-

- படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.
- கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்க வேண்டும். ஓவியங்கள் போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்.
- போட்டியாளரின் சொந்தப்பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒருதாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியம், ஓவியப் போட்டிக்கான படைப்புக்கள்" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- போட்டி முடிவுத் திகதி — 1994-01-20
- படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப் பிரிவு,**
**விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு,**
**கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது.

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**
(சி-8080)

# கெயிற்றித்தீவில் குற்றவாளிகளே நீதிபதிகளாக மாறும் விந்தை

**பாலகுமாரன்**

அவர் யாராக இருந்தாலும் - ஏன் போப்பாண்டவராக கூட இருந்தாலும் அது பற்றி எமக்கு கவலை இல்லை அவர் வேறு எங்காவது இருக்கட்டும். இங்கு வர முடியாது என முன்னர் கெயிற்றி (Haiti நாட்டு இராணுவக் கேணல் ஒருவர் குறிப்பிட்டது இன்று உண்மையாகி விட்டது. முன்னாள் றோமன் கத்தோலிக்க மதகுருவும் பின்னாள் கெயிற்றி சனாதிபதியானவரும் தற்போது அமெரிக்க மியாமி நகரில் விருப்பமின்றி - வேறு வழியின்றி தங்கி இருப்பவருமான அரிஸ்டீட் இன்னமும் தாயகம் போக முடியவில்லை. இப்போதைக்கு திரும்பவும் சனாதிபதியாக அவர் கெயிற்றி செல்லும்வாய்ப்புகளும் குறைவாகவே காணப்படுகின்றது. ஏனென்றால் 1991-ம் ஆண்டு செப்டம்பர் மாத இராணுவ சதிப் புரட்சி மூலம் பதவி பறிக்கப்பட்ட அரிஸ்டீட்டை (Jean Betrand Aristide) திரும்பவும் சனாதிபதியாக்க O. A. S. எனப்படும் அமெரிக்க கண்ட நாடுகளின் தாபனம் முயன்றது முடியவில்லை. பின்னர் அண்மைக் காலமாக அமெரிக்க பக்க பலத்தோடு ஐ. நா. முயன்றது. எதுவும் இற்றைவரை சரிவரவில்லை. ஐ. நா வின் கடந்தமாத முயற்சியின்போது தற்போதைய கெயிற்றி இராணுவ ஆட்சியாளரோடு உடன்பாடு எட்டப்பட்டு அரிஸ்டீட் நாடு திரும்பும் திகதி குறிக்கப்பட்டு - முன்னோடியாக ஐ. நா அலுவலர்கள் கெயிற்றி செல்ல வழிவகுக்கப்பட்டது. இறுதியில் கெயிற்றியின் தற்போதைய ஆட்சித் தலைவர் லெப். ஜெனரல் றாவுல் செட்ராஸ் (Lt. General Raoul Cedras) கடைசி நேரத்தில் காலை வாரியது மட்டுமல்ல ஐ. நா வின் முகத்திலும் கரியைப் பூசிவிட்டார். எனவே இப்போது உலகம் தன்பால் ஆர்வம் இழப்பதைத் துயரத்தோடும் - கோபத்தோடும் அரிஸ்டீட் அமெரிக்காவில் இருந்து அவதானிக்க நேரிட்டுள்ளது.

கம்போடியா, பொசுனியா, அங்கோலா, சோமாலியா என தற்போது ஐ, நா தலையிட்டும் அமைதி கிட்டாத - அமைதி என்பது பகல்கனவாகப் போன நாடுகளின் வரிசையிலே கெயிற்றித் தீவும் இப்போது இடம்பெற்றுவிட்டது. சோமாலிய அனுபவத்தின் பின் விழிப்படைந்து யதார்த்த நிலைமைகளை உணர்ந்த அமெரிக்கா தான் முன்னர் வாக்களித்தபடி ஐ நா வின் கரத்தைப் பலப்படுத்த தனது அலுவலர்களைக் கெயிற்றிக்கு அனுப்ப இப்போது தயக்கம் காட்டுகின்றது. அரிஸ்டீட்டுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். அவர் மீண்டும் கெயிற்றியின் சனாதிபதியாக வேண்டும் எனக் கூறி தன்னை ஒரு கனவானாக காட்ட முயலும் கிளிண்டன், இப்போது படைகள் அனுப்புவதை விட தடைகள் விதிப்பதே மேல் என்கிறார். எனவே ஏற்கெனவேஇரண்டு வருட காலத்திற்கும் மேலாக OAS அமைப்பு விதித்த தடைகளோடு இப்போது ஐ. நா. வின் பொருளாதாரத் தடையும் சேர்ந்துள்ளது. ஆனால் இத்தகைய தடைகள் எல்லாம் முதலில் நேரடியாக ஏழைகளையே பாதிக்கின்றன. வறுமையில் வாடுபவர்களை மேலும் வாட்டுகின்றன. ஏனெனில் கெயிற்றியின் ஆட்சியாளர்களோ தடைகளை மீறப் புதிய வழிகளை கண்டறிந்த வண்ணமே உள்ளனர். எனினும் தடைகள் காலக்கிரமத்தில் உரிய பலனைத் தரும் என்றே ஐ.நா. நம்புகிறது. இராணுவம் இறங்கி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகள் வரலாற்றைப் போலவே கொடுமைகள், அடக்குமுறைகள், சுரண்டல்கள், மலிந்த அமெரிக்க ஆதரவிலான ஒரு குழுவின் சர்வாதிகார குடும்ப ஆட்சியே கெயிற்றி தீவிலும் நடந்தது. டுவாலியர் குடும்ப கோலோச்சியது இவர்களது அடக்குமுறையின் அலங்கோலம் காரணமாக மக்கள் கிளர்ச்சிகள் - கிறித்தவ மதகுருமார் ஆதரவோடு அரங்கேற ஒருவாறாக 1986ஆம் ஆண்டு 'பப்பா டொக்' (Papa Doc) என்றழைக்கப்பட்ட பிராங்கோஸ் டுவாலியர் ஆட்சி அகற்றப்பட்டது. ஆனால் அதன் பின்னரும் மழை விட்டும் தூவானம் விடாதது போல் கெயிற்றியில் குழப்பங்கட்கும் மோதல்கட்கும் குறைவில்லை. டுவாலியர் உருவாக்கிவிட்ட வன்முறைக் கொலைக் குழுக்கள்; ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் இராணுவத்தினர் அவர்களோடு கூட்டுச் சேரும் செல்வந்த வகுப்பினர் எனக் கெயிற்றியின் நிலை மோசமாகியது. சனநாயக தேர்தல்கள் மோசடிக் களங்களாயின. பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாக அலைகடலில் படகேறிச் சென்றனர். அவர்களையும் கடந்த யூன் மாதத்தின் பின் அமெரிக்கா திருப்பிவிடத்தொடங்கிவிட்டது.

> "துயரப்படும் மக்கட்காக துயரப்படுவதோடு மட்டும் நின்றுவிடாது துயர் துடைக்க முற்பட்ட புரட்சிக்கார கிறிஸ்தவ பாதிரியார் அரிஸ்டிட் இன்று குற்றவாளிகளிடம் நீதி கேட்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்"

இத்தகைய கொடும்அடக்குமுறைகளைக் கண்டு மனம் தாளாமல்லத்தீன் அமெரிக்க நாடுகளில் தோற்றம் பெற்ற விடுதலை இறையியல் (Liberation Theology) என அழைக்கப்படும் துயரப்படும்மக்கட்காக வெறும் போதனையோடு மட்டும் நில்லாது மத சம்பிரதாயங்களை விட்டெறிந்து நடைமுறையில் மக்களோடு சேர்ந்து வாழ்ந்து அவர்களை ஏழ்மை அறியாமையிலிருந்து விடுவிக்க கிறித்தவ முற்போக்கு எண்ணம் கொண்ட மதகுருமார் இங்கும் முயன்றனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் றோமன் கத்தோலிக்க குருமார்களான அன்ரொயின் ஏட்ரியன். அரிஸ்டீட் போன்றோர் கிராமப்புறவிவசாயிகளின் வறுமைநிலைமைகளைப் போக்க - சேரிப்புற மக்களை விழித்தெழுப்ப இவர்கள் முயன்றனர். குறிப்பாக இவ்வகையில் அரிஸ்டீட் சேரிப்புற மக்களிடையே நிரம்பிய செல்வாக்கை - தம்மை இரட்சிக்கவந்தவராகக்கருதப்படும் நிலையை பெற்றிருந்தார்.

இவரது கூடிய அரசியல் ஈடுபாடு, மத சம்பிரதாயங்களை புறக்கணித்ததன் விளைவாக இவரது மதப்பிரிவினர் (Salesian Order) இவரை வெளியேற்றினர். அரசியல் அதிகாரம் திரும்பவும்அடக்குமுறையாளர்கள் கையிலேயே செல்வதைத் தடுக்கும் முகமாக ஏட்ரியனின் தூண்டுதலால் அரிஸ்டீட் அவர்கள் 1990 தேர்தலில் போட்டியிட்டு எவரும் எதிர்பாராத மாபெரும் வெற்றி பெற்று சனாதிபதியானார். ஆனால் உண்மையில் அவரால் எதிர்பார்த்தது போல் எவ்வித மாற்றங்களையும் மக்களின் நன்மைக்காக செய்ய இயலவில்லை. அதுவரை காலமும் ஆண்ட வர்க்கம் இராணுவ உதவியோடு அவரை இறுதியில் நாடுவிட்டே அகற்றுவதில் வெற்றி கண்டது.

கெயிற்றியின் சனாதிபதியாக அவர் அமெரிக்காவில் தஞ்சம் புக கெயிற்றியிலோ இராணுவத் தளபதி ராவுல் செட்ராஸ் தலைமையில் செல்வந்தகுழுவொன்று ஆட்சியை நடத்தி வருகின்றது. இதுவரை அரிஸ்டீட் ஆதரவாளர் உட்பட 2000பேர் வரை கொல்லப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

எனவே இத்தகைய நிலையிலே உலகம் தனக்கு நீதி வழங்கும் எனஅரிஸ்டீட் எதிர்பார்த்தார். அவரின் ஆதரவாளர்களோ OAS அமைப்பு படை அனுப்புவார்கள் என எதிர்பார்த்தனர்- பின்னர் ஐ. நா. தலையிட்டு நீதிவழங்கப்படும் என நம்பினர் ஆனால் இன்று ஐ. நா. வின் நீதியும் பிழைத்து விட்டது. இப்போது உண்மையிலேயே நடபபது என்னவென்றால் எவர்களால் அரிஸ்டீட் பதவி விலக்கப்பட்டு துரத்தப்பட்டாரோ அவர்களோடு பேசி ஒரு உடன்பாட்டிற்கு வருமாறு அரிஸ்டீட் தொடர்ந்தும் நிர்ப்பந்திக்கப்படுகிறார். கெயிற்றி அரசோ புத்திசாலித்தனமாக முன்னர் டுவாலியர் எதிர்ப்பாளராக இருந்தவரும்உலக வங்கிஉயர் நிலை அலுவலராக இருந்தவருமான மாக் பேசின் என்பவரை பிரதம மந்திரியாக நியமித்து அவரோடு அரிஸ்டீட் பேசலாம் என்று கூறிவிட்டது. ஆனால் அரிஸ்டீட்டோ தன்னை சதிமூலம் பதவி விலக்கிய சதிகாரர் நியமித்தவரோடு எவ்வாறு தான் பேசமுடியும் என்று தார்மீகக் கேள்வி எழுப்பிய போதும் அதை மேற்குலகம் பெரிதாகக் கவனத்தில் எடுக்கவில்லை- இறுதியாக ஐ. நா. தலையிட்டு கெயிற்றி ஆட்சியாளரோடு உடன்பாடு எட்டப்பட்டு அரிஸ்டீட் நாடு திரும்ப திகதி குறிக்கப்பட்ட பின்னர் தளபதி செட்ராஸ் கடைசி நேரத்தில் மறுத்து விட்டார். இது இன்றைய நிலை-

எனவே இப்போது பற்பல கேள்விகள் எழுந்துள்ளன- இன்னும் எவ்வளவு காலத்திற்கு அரிஸ்டீட்டையும அவரது பிரதிநிதியாக கெயிற்றியில் செயற்படும் வண-பிதா-ஏட்ரியனையும் உயிரோடு விட்டு வைப்பார்கள் என்பது முதலாவது கேள்வி. அரிஸ்டீட்டின் பல நெருங்கிய ஆதரவாளர்கள் ஏற்கனவே கொலை செய்யப்பட்டு விட்டார்கள- இரண்டாவது கெயிற்றி தொடர்பாக அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தின் நிலைப்பாடு (CIA) என்ன என்பதாகும்- சனாதிபதி கிளிண்டன் சி-ஐ-ஏ-யின் ஆலோசனையை மீறிச் செயற்படுவாரா? ஏனென்றால் மிக அண்மையில் அமெரிக்க நாடாளுமன்றக் குழுஒன்றின் முன்னே சாட்சியம் அளித்த சி-ஐ-ஏ- யின் மேலாளர் ஒருவர் தற்போதைய கெயிற்றி ஆட்சியாளரான ராவுல் செட்ராசை புகழ்ந்தது மட்டுமன்றி அவரே நம்பத் தகுந்தவர் என்றும கூறினார்- அத்தோடு தற்போதைய சனாதிபதி அரிஸ்டீட்டைகேவலப்படுத்திஅவர் நிலையற்ற மனம் கொண்ட மனநோய் குறைபாடுள்ளவர் என்றும் அதன் காரணமாகவே அவர் திருச்சபையினின்றும் நீக்கப்பட்டார் என்றும் கூறியுள்ளார்-

இதேவேளை அரிஸ்டீட் பதவி விலக்கப்பட்டதற்கு அமெரிக்காவின் தூதுவராக அப்போது கெயிற்றியில் இருந்த அல்வின் அடம்சும் முக்கிய காரணம் என ஏட்ரியன் குற்றம் சாட்டி வருகிறார். இப்போது சி.ஐ.ஏ யின் கெயிற்றித் தொடர்புகள் வெளிவரத்தொடங்கிவிட்டன தற்போது அரிஸ்டீட் நாடு திரும்புவதை தடுத்து வரும் இராணுவ அதிகாரிகள் சி ஐ ஏயின் ஆட்கள் என்பதும், அவர்கள் தொடர்ந்தும் சி ஐ ஏயின் இரகசிய பணக்கொடுப்பனவுகளை பெற்று வருவோர் என்பதும் இப்போது பரகசியமாகி விட்டது.

இது மட்டுமன்றி முன்னர் 1988ஆம் ஆண்டு நடைபெற்ற மோசடியான தேர்தலில் அப்போதைய சனாதிபதி றீகனின் பணிப்பின் பேரில் சி ஐ ஏ தலையிட்டதும் தெரிய வந்துள்ளது. எனவே அரிஸ்டீட் நாடு திரும்புவது அமெரிக்க புலனாய்வுத் துறைக்கு உவப்பான விடயமாக இல்லை என்பது தெளிவு. தாம் வழமையான தகவல்கள் சேகரிப்பதற்காக கொடுப்பனவுகள் செய்வது போன்றே கெயிற்றியிலும் உயர் இராணுவ அதிகாரிகளை விலைக்கு வாங்கியதாக சி. ஐ. ஏ கூறி வருகின்ற போதும், 1980 களில் கம்யூனிச எதிர்ப்பை மையமாக வைத்து உருவாக்கிய கொள்கைகளைஇன்னமும் முற்றாக சி.ஐ.ஏ.கை விடுவதாகத் தெரியவில்லை.

எனவே இப்படிப்பட்ட உலகிலே முன்னர் சிலியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி சல்வடோர்அலண்டேக்கு நடந்ததையும் எண்ணாது அன்பு. கருணை அறம் என்றயேசுநாதரின் உண்மைச் சீடராக துயரப்படும் மக்களைக் கண்டு துயரப்படுவதோடு நின்று விடாமல் அவர்களது துயரங்களை நீக்க முயன்ற புரட்சிக்கார பாதிரியார் அரிஸ்டீட்டின் இன்றைய நிலை விசனத்திற்கு உரியதே. புரட்சிக்கார கிறிஸ்தவ விசுவாசியான அவர் இன்று குற்றவாளிகளிடமே நீதி கேட்க வேண்டிய நிலையேற்பட்டு விட்டது. இப்போது நீதிபதியாகிவிட்ட குற்றவாளிகளோ அரிஸ்டீட்டிற்கு அமைதி, பொறுமை, பேச்சுவார்த்தைபற்றி போதிக்கிறார்கள். இவற்றினைக் கண்டு மனம் பொறுக்காத அவர் எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மைக்கு உடையவராகி விட்டார்.

முன்னர் தமிழீழ மக்கள் படித்த பாடங்களை- மயிலே, மயிலே என்றால் மயில் இறகு போடுமா? தர்மிஷ்டர் ஜே.ஆரிடம் நீதி கேட்ட முன்னைய தமிழ் அரசியல் வாதிகள் நிலை ஞாபகத்திற்கு வருவது தவிர்க்க முடியாததாகின்றது. எது எப்படியிருந்த போதும் (அரிஸ்டீட்டை அவர்களோடு ஒப்பிட முடியாது என்பதுஉண்மை)இன்று கெயிற்றியில்இரண்டேஇரண்டுசக்திகள் தான்உண்டு ஒன்று இராணுவம்-மற்றது அரிஸ்டீட். தனது மக்கள் ஆதரவினை எவ்வாறு பயன்படுத்தப் போகிறார் அரிஸ்டீட் என்பது இனி வரலாறு சொல்ல வேண்டிய செய்தி.

## பெண்குழந்தைகள் கருவிலே அழிப்பு

'பெண்குழந்தை வேண்டாம் - ஆண்குழந்தைதான் வேண்டும்' என்று பெற்றோர்கள் முடிவெடுப்பது ஆசியாக் கண்டம் முழுவதும் பரவியுள்ள பிரச்சினை. குறிப்பாக சீனாவிலும் இந்தப் பிரச்சினை பலமாக வேரூன்றியிருக்கிறது.

சீனாவில் - இப்பொழுது சமூகத்தை மிகவும் பாதிக்கும் புதிய கண்டுபிடிப்பு - கம்பியூட்டரோ, காரோ, மற்ற சாதனங்களோ அல்ல. அல்ட்ரா சவுண்ட் ஸ்கானர் தான்.

இந்த ஸ்கானரின் உதவியால் பிறக்கவிருப்பது ஆணா, பெண்ணா என்பதைக் கண்டுபிடித்து விடமுடியும் இந்த ஸ்கானர் சீனாவில் முதன்முதல் 1979-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது இப்பொழுது ஏறத்தாழ ஒரு இலட்சம் ஸ்கானர்கள் சீனாவில் பழக்கத்திலிருப்பதாகத் தெரிகிறது.

35 இலிருந்து 50 அமெரிக்க டொலர்கள்வரை லஞ்சம் கொடுத்தால் பிறக்கவிருப்பது ஆணா, பெண்ணா என்பதை ஒரு டாக்டர் ஸ்கானரின் உதவியால் கண்டுபிடித்துக் கூறி விடுகிறார். பெண்குழந்தை என்று தெரிந்தால், உடனே கருக்கலைப்பு செய்து கொள்கிறார். இதனால் சீனாவின் பிறப்பு விகிதம் இப்பொழுது 118.5 ஆண்குழந்தைகளுக்கு 100 பெண்குழந்தைகள் என்ற அளவில் குறைந்து விட்டது. இது ஒரு பூர்வாங்கமான கணக்கெடுப்புதான் என்றாலும், அதிர்ச்சியடைந்த அரசு அதிகாரிகள் இந்த சர்வேயின் முடிவுகள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

# மொஸ்கோவில் பரிதவித்து நிற்கும் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும்!

சுவிஸ் நாட்டில் வேலை புரியும் எனது சகோதரர் திட்டப்படி நான் கொழும்பிலிருந்து விமானம் மூலம் மொஸ்கோ சென்றேன். அங்கே அவரால் அனுப்பப்பட்ட பிரயாண முகவர் எனக்காகக் காத்திருந்தார். விமான நிலையத்தை விட்டு வெளியேறிய நான் முகவரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வீடொன்றில் தங்க வைக்கப்பட்டேன். நான்கு பேர் மட்டுமே தங்கக் கூடிய அறையில் நான் பன்னிரண்டாவது ஆளாகத் தங்க வேண்டி ஏற்பட்டது.

அங்கே அரிசியும் பருப்பும் மட்டுமே எமக்கு முகவரால் தரப்பட்டது அதைக்கொண்டு நாம் சமைத்து உண்டோம். இவ்வாறு ஒரு சில நாட்கள் கடந்ததும் என் முகவர் சுவிஸ் செல்வதற்கான பயண ஒழுங்குகள் எல்லாம் செய்ய வேண்டி இருப்பதாகக் கூறி என்னிடமிருந்த பாஸ் போர்ட், மற்றும் பயணிகள் காசோலை ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு சென்றவர் திரும்பி வரவேயில்லை. இதனால் நான் எனது அறையில் தங்கியிருந்த சக இளைஞர்களின் உதவியுடன் எனது சகோதரருடன் தொடர்பு கொள்ள சென்றல் ரெலி கிராப் எனும் இடத்திற்கு சென்றேன். அங்கே தான் வெளிநாடுகளுடனான தொலைபேசி வசதிகளும் அந்நிய செலாவணி மாற்றுவதற்கான வங்கியும் உண்டு, மொஸ்கோவில் தங்கியுள்ள எமது இளைஞர்களும் யுவதிகளும் தொடர்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக தினமும் காலையும் மாலையும் அங்கே வருவார்கள். இதனால் இந்த இடம் நாம் தமிழர்களைச் சந்திப்பதற்கான ஒரு இடமாகத் திகழ்கிறது.

அங்கே சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ இளைஞர்களும் யுவதிகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக பல காலமாகக் காத்துக் கிடக்கிறார்கள்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பல வருடங்களாக அங்கு தொழில் புரிந்து அந்தந்த நாட்டின் பிரஜாவுரிமை பெற்ற தமிழ் இளைஞர்களே பிரயாண முகவர்களாகச் செயற்படுகின்றனர்.

இவர்கள் கனடா செல்வா, இத்தலி செல்வா, சுவிஸ் சேவியர், செல்டர் சிவா, செக்கோ ரூபன், இத்தாலி பொன்னு. மொஸ்கோ ரஞ்சன், லெனின் கிரேட் ராஜா, மட்டு அருள் எனப் பல புனைப் பெயர்களில் அங்கு முகவர்களாகச் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிவகுமார் என்பவரும் ஒருவர். இவர் செல்ரர் சிவா, சிவகுமார், போடர் சிவா எனப் பல பெயர்களில் அங்கு நடமாடுகிறார்.

இவர்கள் அனைவரும் கொழும்பில் இருந்து செயற்படும் முகவர்களின் இரண்டாவது பயண முகவர்களாக மொஸ்கோவில் செயல்படுகின்றனர். அங்கு இவர்கள் பல வீடுகளை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். கொழும்பு முகவருடாக மொஸ்கோ வந்தடையும் இளைஞர்களையும்' யுவதிகளையும் அழைத்துச் சென்று இவ்வீடுகளில் தங்க வைக்கின்றனர்.

இங்கிருந்து செல்வோரில் பெரும்பாலானவர்கள் பெண்களாகவேயுள்ளனர். இவர்கள் ஜேர்மன், சுவிஸ், கனடா போன்ற நாடுகளில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு செல்பவர்களாகக் காணப்படுகின்றனர் அத்துடன் கணவன்மாரிடம் செல்லும் மனைவிமாரும் குழந்தைகளும் கூடவுள்ளனர்.

> ''வெளிநாடுகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்பி வைத்தால் போதும் என்ற விருப்பில் உண்ணாமல் உறங்காமல் கஷ்டப்பட்டு, கடன்பட்டுபல லட்சங்களை திரட்டிக் கொடுத்து அனுப்பிவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விடும் எம் பெற்றோர் வழியில் தம் பிள்ளைகள் அனுபவிக்கும் சொல்லொணாத் துயரங்களை அறிய முடியாது போவது அவர்களது துரதிர்ஷ்டமே''
>
> இவ்வாறு அண்மையில் மொஸ்கோ வரை சென்று திரும்பிய கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த கதிரவேலு மகேந்திரன் என்பவர் தனது பயண அனுபவத்தை விபரிக்கிறார்.

அங்கே லெனின் கிரேட்ராஜா என்பவர் விடுதிகளை நடாத்துகிறார். இவை ஆண், பெண் இருபாலாருக்குமென தனித்தனியே இயங்குகின்றன.

வெளிநாடுகளில் இருக்கும் கணவன்மார், சகோதரர்கள் தத்தமது நாட்டில் இவ்வாறு முகவர்களாகச் செயல்படுபவர்களை அணுகி, தமது உறவினர்களை அழைத்துவருவதற்கான பொறுப்புகளை ஒப்படைக்கின்றனர். அதற்கென பல இலட்சக் கணக்கான பணத்தையும் இவர்களுக்கு வழங்குகின்றனர். ஆனால் இவர்களோ மொஸ்கோ வந்து எம்மை அழைத்துச் சென்று அங்குள்ள தத்தமது வாடகை வீடுகளில் எம்மைத் தங்கவைத்துவிட்டு எம்மிடம் இருக்கும் விமானப் பயணச் சீட்டு, பாஸ்போர்ட், வெளிநாட்டுப் பணம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டு தலைமறைவாகிவிடுகின்றனர். இவ்வுடைமைகளை இழந்ததால் நாம் எவரும் வெளியிலே தலைகாட்ட முடிவதில்லை. வெளியே சென்றால் பொலிசார் எம்மைப் பிடித்துச் சென்றுவிடுவார்கள்.

அங்கே மொழிப்பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. அதனால் எமது நிலைமைகளைக்கூட எடுத்து விளக்கமுடியாத நிலையில் நாம் தவிப்போம். சில பொலிசார் பணத்தைப் பெற்றுக் கொண்டு எம்மை விட்டுவிடுவார்கள். சிலர் பிடித்துச் சென்று சிறையில் வைத்துச் சித்திரவதை செய்வார்கள். நான் செல்வதற்கு சிலமாதங்களுக்கு முன் பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டபோது அங்கேயே இறந்துவிட்டதாக அறிந்தேன்.

இதனால் நாம் கண்டபடி வெளியே செல்வதில்லை. எமது இந்நிலை முகவர்களுக்குச் சாதகமாகவுள்ளது நாம் அவர்களை மிரட்டினாலோ தாக்க முற்பட்டாலோ அல்லது நெருங்கினாலோ அவர்கள் எம்மைப்பொலிசில் பிடித்துக் கொடுத்துவிடுவார்கள். அதனால் நாம் அங்கு சிறை வாழ்க்கையே வாழவேண்டியுள்ளது.

சென்றல் ரெலிகிராப் என்னும் இடத்தில் சந்திக்கும் போதுதான் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்படும் துன்ப துயரங்களைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்வோம். சுமார் மூன்று முதல் ஐந்து இலட்சம் ரூபா வரை கொடுத்துவிட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாக மொஸ்கோ வைத் தாண்ட முடியாது தவித்துக் கொண்டிருப்போரே இவர்களில் அதிகம் இவர்கள் தமது துயரங்களைக் கண்ணீராலேயே வெளிப்படுத்துவர். யாழ்ப்பாணத்தின் பலபாகங்களில இருந்தும் அங்குசென்று தங்கியுள்ள இளம் பெண்களின் கதைகள் மிகுந்த துயரம் மிக்கவை. அங்கே வேடனிடம் சிக்கிய மானைப் போன்றதே இவர்களது நிலை. முகவர்களாலும் அவர்களது கையாட்களாலும் இவர்களது எதிர்கால வாழ்க்கையே சிதறடிக்கப்படுகின்றது திருமணமாகி குழந்தைகளுடன் தங்கியிருப்பவர்களுக்கும்இதேகதிதான்.

இந்நிலைக்குஆளான இவர்கள் தமது கணவன் மற்றும் சகோதரர்களிடம் செல்லவும் முடியாது திரும்பிச் சொந்த மண்ணிற்கு .வரவும்முடியாது அங்கே நடைப்பிணங்களாக அலைந்து கொண்டிருக்கின்றனர். அங்குள்ள சூழ்நிலை அவர்களை அந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டது. இவர்களது முகவர்களோ இவர்களை உரிய இடங்களுக்கு அழைத்துச் செல்வதில் அக்கறை செலுத்தாது தமது தேவைகளைப் பெற்றுக்கொள்வதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர்.

இது இவர்களின் தவறு என எளிதில் கூறிவிட முடியாது. இவர்களை இங்கிருந்து தனியே வெளிநாடுகளுக்கு அழைக்கும் உறவினரே இதற்குரிய பொறுப்புக்களை ஏற்க வேண்டும். ஏனெனில் பல வருடங்களாக வெளிநாடுகளில் வசிக்கும் இவர்களுக்கு அங்கு நடக்கும் ஒவ்வொரு நிலைமைகளும் நன்குபுரியும். இவர்கள் தாம் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற முடியாததினால் முகவர்களை நாடுகின்றனர். அவர்கள் நிலைமையை புரிந்து கொண்டவர்களாதலால் சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக்கிக் கொள்கின்றனர்.

தற்போது இம்முகவர்களில் பெரும்பாலானவர்கள் அங்கிருந்து தலைமறைவாகிவிட்டனர். இதனால் அங்கு தங்கி நிற்கும் அனைவரும் செய்வதறியாதுள்ளனர். உறவினர்கள் பணம் அனுப்பாதுவிட்டால் இவர்களது எதிர்காலமே கேள்விக் குறியாகிவிடும்.

இங்கிருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகள் சென்று பல வருடங்களாகி விட்டன. இன்னும் பதிலைக் காணவில்லை என தினமும் தபால்காரனை பார்த்து வாசலில் காத்து நிற்கின்றனர்.

மொஸ்கோவிலிருந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான ருமேனியா, சோபியா, ஒஸ்ரியா, செக்கோ ஊடான சகல பாதைகளும் மூடப்பட்டு விட்டன. இதனால் இனிமேல் எக்காரணம் கொண்டும் அங்கிருந்து மேற்படி ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லமுடியாது அண்மையில் ருமேனிய எல்லையை கடந்து ஜேர்மன் புக முற்பட்ட ஆறு தமிழ் இளைஞர்கள் மொஸ்கோ பொலிசாரால் சுடப்பட்டனர். இவர்களில் மூவர் அந்த இடத்திலேயே பலியாகினர். இவர்களது உடல்கள் அங்கு கிடங்கில் புதைக்கப்பட்டன. மற்றைய மூவரும் திரும்பி வந்துவிட்டனர். இவர்களைக் கூட்டி சென்ற பாகிஸ்தானியர்(எல்லைகடக்க உதவுபவர்கள்) தப்பி ஓடிவிட்டார்கள்.

விமானம்மூலம் செல்கின்றபோது இலங்கையர் என்றதும் விமான ஓட்டியே (Pilot) எமது பாஸ்போட் விசா ஆகிய வற்றை பறித்து விடுவார். ஏனெனில் நாம் ஒரு நாட்டிற்கு செல்வதற்கு விசா எடுத்து விட்டு வழியில் நாம் செல்லும் நாடு வந்ததும் அங்கே பாஸ்போட்டை கிழித்து எறிந்துவிட்டு இறங்கிவிடுவோம். அவ்வாறு இறங்கினால் விமான நிறுவனம் எம்மை ஏற்றி வந்ததற்காக அந்த நாட்டிற்கு பல லட்ச ருபாவை தண்டமாக செலுத்த வேண்டும். என்பதால், சில வேளைகளில் பாஸ்போட்டை கிழித்ததை கண்டுவிட்டால் கீழே இறங்க விடாது பிடித்து அடித்து விட்டு விமானத்திற்குள் இருக்கும் அறைக்குள் வைத்து பூட்டிவிடுவார்கள். திரும்ப நாம் ஏறிய நாட்டிலேயே கொண்டு வந்து இறக்கி விடுவார்கள். இதனால் இனிமேல் மொஸ்கோ ஊடாக எந்த நாட்டிற்கும் செல்ல முடியாது. அதனால் நான் அங்கிருந்து மீண்டும் சகோதரரின் உதவியைப் பெற்றுயாழ்ப்பாணம் திரும்பி விட்டேன்.

ஆனால் அவர்களோ செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

**சந்திப்பு:- சசீகரன்**

## சுவடுகள் பார்த்தே நடக்கின்றோம்

கனவுகள் சுமந்து கண் விழித்திருந்து
களமாடி தேசம் மீட்டிட எழுந்தோர்
நினைவுகள் சுமந்து நடக்கின்றோம
நம் தமிழ் இனத்தின் விடுதலைக்காய்

''இருந்தால் மீண்டும் சந்திப்போம்''
என்றே கூறிச் செல்வீர்கள்
புரிந்து கொண்டோம் அதனர்த்தம் — உருவப்
படத்தில் மாலை சூடுகையில்

பறக்கின்ற பொம்பர் ஹெலிகளுக்கும்
புலிகள் தாமெனப் புரியவைத்து
செருக்களம் நோக்கிச் செல்லும்போதும்
சிரிக்கும் வதனம் கண்டிருந்தோம்

உங்களின் நினைவே உறுதியெனும்
உற்ற பாடம் புகட்டுவதால்
சிங்களப் படைதனைச் சிதறடிக்க — உங்கள்
சுவடுகள் பார்த்தே நடக்கின்றோம்

அ. தாஸ்

## சரித்திரம் படைத்திட வாருங்கள்

எங்கள் மண் விடியும் நேரம்
எதிரிதன்னை விரட்டிடவே
எழுந்து வாருங்கள் போர்க்களம்
பதுங்கி வாழும் நேரமல்ல
படுத்துறங்கும் காலமல்ல
பகைவன் வரும் நேரமிது
பொறுத்திருந்தால் போதுமா
பொங்கி எழுந்து வாருங்கள்
சங்கு முழங்குது களத்திலே
சரித்திரம் படைத்திட வாருங்கள்.

– சி. சிவசீலன்

சிறுகதை

# நிஜங்கள்

யோசப்பாலா

வீட்டின் அலங்காரங்கள் புதிய அழகைக் கொடுத்தது. வீட்டிற்குள் இருந்து தையல் மெசினின் சத்தம் பத்மாவின் இருப்பைக் கூறிக் கொண்டது தடிகள் சவுக்குகள் கொண்டு சிறுவர் கூட்டம் பாலன் குடிலைத் தயாரித்து நத்தார் திருவிழாவிற்கு ஆயத்தம் செய்து கொண்டு இருந்தனர். இதில் கடைக்குட்டி நிரோஷன் தன் அறியா நிசழ்வுகளை சகோதரர்களிடம் கேட்டுக் கொண்டான் ஏன் இந்தக் கொட்டில் என, பதில் திருப்தியாகப் படவில்லை. அம்மாவிடம் அறைக்குள் சென்று,

''அம்மா, அம்மா, ஏனம்மா அண்ணா, அக்கா எல்லாம் சின்னக் கொட்டில் கட்டினம் ?''

''அது நிரோ பாலன் பிறப்பு கொட்டில், அதிலதான் பாலன் பிறந்தவர். அது தான் ... ...''

''ஏனம்மா கொட்டில்ல பிறந்தவர்? எங்கடை வீட்டைப் போல வீடுகள் இல்லையாம்மா அவர் பிறப்பதற்கு.''

''தம்பி, அப்ப எல்லாம் பெரிய வீடுகள் இருந்தாலும் அவர் பிறக்க ஒருதரும் இடம் கொடுக்கவே இல்லை. அது தான் அவர் போய் மாட்டுக் கொட்டிலில பிறந்தவர்''

''ஐயோ, பாவம்என்னம்மா சின்னப் பாலன் மழைக்கு விருக்க நுளம்புக்கடிக்க மாட்டுக் கொட்டிலுக்க பிறக்க அங்க இருந்த வீடுகள் எல்லாம் பூட்டிக் கிடந்ததாம்மா ? என்று பால்மணம் மாறாத நிரோ கேட்டான்''

இல்ல நிரோ இல்ல. எல்லாத்திலயும் எங்கட நாடுகளைப் போல ஆக்கள்தான் இருந்தவையள் ஆனா இடம் கொடுக்கத்தான் மனம் இல்லாம இருந்ததால மரியாளும் சூசையும் சத்திரத்திலபோயும் கேட்டுப் பாத்திச்சினம். ''சத்திரத்திலயும் அவர்களுக்கு இடமில்லை'' எண்டு சொல்லிப் போட்டினம் அதுதான் பாலன் அந்த ஒதுக்குப் புறமான மாட்டுத் தொழுவத்தில கடும் குளிருக்க சின்னப் பாலன் பிறந்தார் என்று கூறி தன் தையல் வேலைக் கவனத்துடன் தன் மகனின் கேள்விக்கு விடையளித்தாள் பத்மா.

''அம்மா, அம்மா தாருக்கம்மா இந்தச் சட்டை?''

'' அது அக்காக்கடா கண்ணே''

''அப்பஎனக்கு இல்லையா, அக்காக்கு மட்டும்தானா...''

''இல்லை நிரோ நத்தாருக்கு எல்லாருக்கும் புதுஉடுப்புத்தான். உனக்கு லோஞ்சும் சூட்டும் வாங்கி இருக்குகனடா மாமாவும் உடுப்பு அனுப்பிஇருக்கிறார். நானும் ஒன்று தைச்சுத் தாறன்.''

''அப்ப எனக்கு மூண்டு சட்டையாம்மா?, என்ற கேள்விக்கணைக்குப் பதில் சொல்வதில் சிரமப்பட்டுக் கொண்டிருந்த பத்மாவுக்கு' கேற்றுச்சத்தமும், நாயின் குரைப்பும்புதியவர்வருகையை உணர்த்திற்று.

''அம்மா, அம்மா தாரோ வந்திருக்கினம்.''

''தாரோ இல்லை. உங்களைச் சின்ன வயசில தூக்கி வளத்த செபமாலை அம்மா தான்வந்திருக்கிறா வா, செபமாலை வா ஆளேமாறீற்றாய், எங்கஇருக்கிறாய் செபமாலை இப்ப'' என்றாள் பத்மா.

''இருந்த வீட்டையும் குண்டு போட்டு சிதைச்சிட்டாங்க. நாங்க இங்க ஓடி வந்திட்டம். அதுதானம்மா இடம் ஏதும் இல்ல அமகாதியா அலைஞ்சு அ*திக் கொட்டில்ல குந்தினம், அதிலும் வெள்ளம் வந்திட்டுது. குழந்தையையும் கிடத்த ஏலாம ஒதுங்க ஒரு இடம் இருந்தா கேப்பம் எண்டு தான் ...''

''என்ன செபமாலை, எங்கட வீட்டிலையும்பிள்ளையள் வள‌ர்ந்து இருக்கு. அதோட நல்ல நாள் பெருநாள் நாலு பேர் வர இரு*கினம்... ''

''இதைத்தானம்மாஎல்லாரும் சொல்லுகினம், எங்க எண்டாலும் பின் புறத்தில கொட்டில்ல ஒரு இடம் இருந்தா ...''

''நீ, வீடு கேட்டு, கோடி கேட்கிறாய். முந்தியும் ஒரு குடும்பத்தை பின்னுக்கு இருத்தி எழுப்பப்பட்டபாடு. இப்ப நீ வந்தது இதுக்குத் தானெண்டா எங்களைப் பார்கிற ஆசை கூட உனக்கு இல்லைத்தானே ...''

''அம்மா உங்களை மறப்பனா... உங்கட வசதிகளுக்க நான் வர நிரோ குழந்தைக்கு ஏதும் கொண்டு வர வேண்டும் என்பதில ஒண்டும் கிடைக்காததாலயும், எங்கட பஞ்சத்திலயும் தானம்மா வர முடியல்லை.''

''நல்ல சாட்டு சொல்லுறாய். சரி சரி எனக்கு வேலை கிடக்கு. நீ போய்ற்று வருசம் போல வா. கைவியளம் தாறன்.''

''அம்மா, அப்ப நான் கேட்டது, இந்த மழை முடியும் மட்டும் எண்டாலும், பிறகு அந்தக் கொட்டிலுக்குப் போயிருவம்.''

''அதுதான் சொல்லீற்றன் எல்லோ. வேற பள்ளிக்கூடம் கோயிலில பாத்து இருந்தியெண்டா உதவியும் கிடைக்கும் எல்லோ .''

''சரியம்மா, குளிருக்குப் போத்துக்க ஏதும் பழைய உடுப்பு இருந்தாத் தாங்கம்மா!''

''செபமாலை, இருக்குத் தான் அதுகளை இப்ப எடுத்துத் தர நேரம் இல்லை வேலையில இருக்கிறன். வருஷம் முடிஞ்சு வா பாப்பம்.

''சரி அம்மா. வாறன் போயிட்டு வாறன் நிரோக் குஞ்சு ஆண்டவரிட்ட நல்லா மண்டாடுங்கோ. உங்கட மண்டாட்டந்தான் சின்னப் பாலனும் ஆசையோட கேப்பார்'' எனக் கவலைச் சுருக்கம் முகத்தில் தோய வாசலைக் கடந்தாள் செபமாலை.

''அம்மா, அம்மா அவையளிட்ட சின்னப் பாப்பா இருக்காமா? இங்க கொண்டு வரச் சொல்லுங்கோம்மா. ஆசையாய் இருக்கு'' என்றான் மழலை நிரோ.

''நிரோ அந்த வவாவுக்கு அவங்கட அம்மா, அப்பா, அக்கா, அண்ணா எல்லாம் இருக்கு அவையள் தரமாட்டினம்.''

''அம்மா அம்மா எல்லாரும் வந்து எங்கட பின்னுக்கு இருந்தா நாங்க தூக்கலாம் அம்மா அந்த வவாவை.''

''சும்மா இருங்க நிரோ, நீங்களும் ஒரு வவா மாதிரி சிணுங்காமநாளைக்கு பாலன் பிறப்பேர் அவரைப் போய்ப் பார்ப்பம் படுக்க வாங்கடா'' என குழந்தையின் மனத்தை திசை மாற்றினாள் பத்மா.

அந்த இரவு, கலகலப்பில் நிரோவிற்கு தூக்கமே வரவில்லை.

''நிரோ படுத்துத் தூங்குங்கோ. இரவு பன்னிரண்டு மணிக்கு பாலன் பிறப்பேர். புதுச்சட்டை போட்டு கோவிலுக்குப் போக வேணும். நாளைக்கு நத்தாருக்கு கேக்கு வெட்ட வேணும் எல்லாரும் படுங்கோ'' என்றவாறு நிரோவை நித்திரையாக்க முயன்றாள் பத்மா.

முன்பு எல்லாம் நத்தார் கொண்டாட்டம் என்றால் சீனவெடிகள், வாணவெடிகள், ஈக்கில்வாணம் சக்கரவாணம் மத்தாப்புகள்எனசிறுவர் முதல்பெரியோர்கள் வரையில் குதூகலத்துடன் இருப்பர். அதே சீனவெடிகள் வாணவெடிகள் வானத்தில் இருந்தும், அயல் கிராமத்திலிருந்தும், ஆட்லறியாகவும் சினச்சகடையாகவும் இன்று வந்துகொட்டுகிறது.

என்றும் போல எமது நாட்டின் வாடிக்கையான முழக்கம், இடிகள் கலக்கமூட்ட இரைச்சலுடன் வானைப் பிளந்து வந்த இராட்சத விமானமொன்று ஆலயத்தில் தன் பேடித்தனத்தை குண்டுகளால் விதைத்து தள்ளி தன் வீரத்தைக் காட்டியது. அந்த அழிவுகள் புனிதயாகப்பர் ஆலயத்தை நினைவூட்டியது. இச் செய்தி எல்லோர் காதிற்கும் எட்டிக் கொண்டாலும் வெளியிற் செல்ல தயக்கம் விடவில்லை.

குழந்தைகளும் தாயுமாக அதிர்வில் கலங்கியவர்களாக வீட்டிலிருந்து ஓடி அயல்வீட்டாருடன் ஒதுங்கினர், இரவு முழுவதும் மரத்தடியின் கீழ் உள்ள சேறும் சகதியுமான பங்கருக்குள் மழைத்தூறலுடன் மனங்கலங்கியபடி பாதுகாப்பைத் தேட குழந்தையின் அனுக்கமான குரல் பத்மாவைத்திணறவைத்தது.

''என்ன நிரோ என்னம்மா செய்யுது? ஏனம்மா என்ன வேணும்'' ''அம்மா அம்மா இன்றைக்குப் பாலன் பிறப்பாராம்மா? ''

''ஓம் கண்ணே இரவுக்குப் பிறப்பார்தானே''

''கோயில்தான் உடைஞ்சிட்டுதேஎங்கையம்மா பிறப்பார் பாலன்?'' பதில் சொல்லத் திணறிய பத்மா ''எங்க வீட்டில பிறப்பார்தானே'' என்றாள்.

''பாலன் வீட்டில பிறந்தா நாங்க பங்கருக்குள்ள இருக்கிறமேயம்மா'' ' சத்தம் போடாம விளக்க நாருங்கோ பேந்தும் இரையுது எங்க சுத்துதோ '' என்று பங்கருக்குள் பதுங்கி இருந்தவர்களில் முதியவரான குருசுமுத்தர் கூறும் குசுகுசுப்புக்கள் அருகில் கேட்ட அதிர்வுடன் ஒரு கணத்தில் அடங்கி விட்டது.

பனை, தென்னைச் சரிவுடன் பத்மாவின் வீடும் தரைமட்டமானது மனங்கள் எல்லாம் சிதைவுற்ற நிலையில் கலங்கிக் கொண்டபோது,

அம்மா... அம்மா என்றஅலறலுடன் செபமாலை ஓடி வந்தாள் வீடு சிதைவுற்று இருப்பதைக்கண்டு திகைத்தவளாய் பத்மா அம்மா... பத்மா அம்மா... நீரோ கண்ணா .. நிரோ கண்ணா' என்று வீரிட்டு கத்திய குரலைக் கேட்டு பங்கரில் இருந்தவர்கள் வெளியே வந்தனர். பத்மாவைக் கண்ட செபமாலை ஓடிச் சென்று '' அம்மா... அம்மா நான் ஏதோ எண்டு பயந்திட்டன். நல்ல காலம் அம்மா அண்டைக்கு நீங்க சொன்னது. நான் அந்தக் கொட்டிலுக்க தான் இருக்கிறன். வாங்கம்மா, வாங்களங்கட கொட்டிலுக்குப்போவம். வா, நிரோ அழாமவா கண்ணா, எனத் தூக்கி

(7ஆம் பக்கம் பார்க்க)

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா நத்தார் வெகுமதி!

சுவைதேடும் சுவைப் பிரியர்களுக்கு வழங்கும்

சுவையான செய்தி

லம்பாரிஸ்புரியாணி விலை ரூ. 50/-மட்டுமே

மற்றும் உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

வழமையான உணவுப் பார்சல்கள்

மரக்கறி, மீன், இறைச்சி

தினமும்

முற்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலைத்தேய, கீழைத்தேய

உணவு வகைகளுக்கு

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா,

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,


சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உருவம் ஜெசித்தாரா

(சி-8186)

ஓராண்டு

ஐந்தாம் ஆண்டு



நினைவஞ்சலி



திரு. வ. நல்லையா

தோற்றம் :- 2?-08-1908

மறைவு :- 04-01-1993

திருமதி நல்லம்மா நல்லையா

தோற்றம் :- 01-04-1916

மறைவு :- 22-04-1988

தந்தையின் திதி ;- 24-12-1993

அன்பின் ஒளிவிளக்காய் பாசத்திலும் பண்பிலும் உறைவிடமாய்
குடும்பத்தின் இல்லக விளக்காய் உங்கள் துயரம் பாராது
எங்களை நல்வழிகாட்டி வளர்த்த அன்புத் தெய்வங்களே!
நாட்கள் பல கடந்தும் ஓயவில்லை எங்கள் கண்ணீர்
ஆதாரம் இழந்து ஆற்றுவார் இன்றி தவிக்கின்றோம் பாரினில்
நாம் உள்ளவரை நீங்கள் காட்டிய நல்வழியில் செல்ல
உங்கள் ஆசிவேண்டி நித்தமும் கண்ணீர் மலர் சொரிகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

'முதலியார் வளவு'
வளலாய், அச்சுவேலி

(6936)

## புலமைப்பரிசில் பரீட்சை சாதனையாளர் பிரகாஷ்

# "படிக்க வேண்டும் என்ற முயற்சி பிரகாஷிடம் இயல்பாகவே இருந்தது"

சுன்னாகம் சந்தியில் தொடங்கி அளவெட்டி செல்லும் வழியில் கொஞ்சத் தூரம் சென்றால் இடது பக்கமாகப் பிரியும் வழியின் தலைப்பில் தமிழ்க்கந்தையா உபாத்தியாயர் வீதி என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்திருக்கலாம். இந்த வீதியில் சென்று சற்று அசைந்தல் சனசந்தடியற்ற மூலையில் அமைந்ததுதான் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம். வீதி சுற்றிச் சுழன்று உடுவில் வரையில் செல்கிறது. நகரம் சாராத கிராமமென்றாலும் வழியில் ஓரிரு பழைய கட்டடங்கள். வீதியின் இரு பக்கங்களிலும் இடையிடையே பனை மரங்கள் அணி செய்கின்றன. கிராமச் சூழலின் பிரதிபலிப்புத்தான் கந்தரோடை தமிழ்க் கந்தையாவித்தியாலயம்.

-- அதிபர் க. செல்வக்குமாரனை அவர் காரியாலயத்தில் சந்தித்துப் பிரகாஷ் பற்றிக் கேட்டபோது,

'' -- பிரகாஷ் படிப்பில் நல்ல சுட்டி. அவர் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற பெறுபேறுக்கு ஆசிரியர்கள் தான் காரணம். ஆண்டு ஒன்று முதல்இங்குதான்படிக்கிறார். அப்போது தொடக்கம் படிப்பில் நல்ல ஆர்வத்தை அவரிடம் அவதானிக்க முடிந்தது. பிரகஷின் வகுப்பாசிரியை செல்வி கந்தசாமி பத்மினி தேவி. என்னவோ நியமனம் நடன ஆசிரியை நியமனம் தான். கணிதம் கற்பிப்பதில் பத்மினிதேவி ஆர்வத்துடன் ஈடுபட்டார். இத்தருணத்தில் எமது பழைய மாணவர் சி. உதயகுமாரின் உதவியும் கிடைத்தது. எட்டு ஆசிரியர்கள் பற்றாக்குறை அதனால் பழைய மாணவர் உதவியை நாட வேண்டியுள்ளது. தமிழ் மொழியை சி. முத்துக்கிருஷ்ணர் கற்பித்தார். பிரகாஷ் பாடத்தோடு இணைந்த வேலைகளிலும் கணிசமான அளவு அக்கறை காட்டினார். சிறார்களுக்கு இருக்கும் வழமையான துடியாட்டமும் அவரிடம் இருந்தது. ஆனால், வகுப்பில் பிரச்சினைகள் இல்லாத மாணவர் அவர்'' என்கிறார்.

இதன் ஸ்தாபகர் அமரர் கந்தையா நினைவுக்குரியவர் அண்மையில் ஒரு நூற்றாண்டினைக் கண்ட இந்த வித்தியாலயம், கிராமத்துப் பள்ளிக்கூடம் என்ற இளக்காரமான மனப்பான்மையை மாற்றி, ஒரு பாடசாலை அன்றாடம் சந்திக்கும் பல சோதனைகளையும் தாண்டிச் சாதனைகள் பல படைத்துள்ளது வெளிப்படை. க பொ. த (சா|த) 1990 டிசம்பர் பரீட்சை 1991 ஆம் ஆண்டில் நடைபெற்றது இப்பரீட்சைக்கு முதன் முதலாகத் தோற்றிய 24 மாணவர்களில் 16 பேர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். 1991 டிசம்பர், 1992 டிசம்பர் க. பொ. த (சா|த) பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகள். இந்தவித்தியாலயத்தில் க. பொ. த (சா|த) வகுப்புகரைதான் உள்ளது. இங்கு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள்தான் இம்முறை வேறு பாடசாலைகளில் ஏ. எல் பரீட்சையில் (கணிதம்) 4A களும், 3A ஒரு Bயும் பெற்றுள்ளார்கள்.

பிரகாஷின்தாயார் செல்வ ரஞ்சினிதேவியை உடுவிலில் அவர் வீட்டில் சந்தித்து மகனின் சாதனைக்குக் காரணம் பற்றிக் கேட்டபோது, எமது நோக்கத்தைப் புரிந்து கொண்டு கூறுகிறார்.

> கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் கல்வி உலகில் பிரசித்தம். இந்த வித்தியாலயத்தைப் பற்றி ஆரவாரமாக பேசிக் கொள்கிறார்கள என்றால் இப் பள்ளிக்கூடம் சமூகத்துடன் எவ்வளவு ஒன்றிணையானது என்பது வெளிப்படை இப்பள்ளி மாணவன் கணேஸ்வரன் பிரகாஷ் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையிலும் தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.
>
> **சந்திப்பு - மதன்**

'' எனக்கு மூன்று ஆண் பிள்ளைகள். பிரகாஷ் மூன்றாவது மகன் நல்ல சுகதேகி. ஆனாலும் மெலிந்த சரீரம். அதனால் தூர இடங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டாம் என்று தயங்கினோம். தமிழ்க் கந்தையா வித்தியாலயம கல்வியில் முன்னேற்றமாக விளங்கியதால் அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டோம். பிரகாஷ் மிகவும புத்திசாலி. ஆண்டு ஐந்துக்கு வந்ததும் மானிப்பாயில் ஒரு தனியார் கல்வி நிறுவனத்தில் ரியூசன் படிக்கப் போயிருந்தார். அதேவேளை ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்குப் பள்ளிக்கூடத்தில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெற்றன அந்த வகுப்புகளிலும் பிரகாஷ் துடிப்புடன் சென்று கற்றார். 170 வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் எடுத்தால் யாழ். இந்துக் கல்லூரியில் சேரலாம் என்றும் சொல்லியிருந்தோம். அதனாலும் ஒரு ஆர்வம் அவருக்கு.''

- அவர் வீட்டில் பாடங்களைப் படித்தவிதம் பற்றிக் கேட்டபோது -

-''அடிப்படையில் படிக்க வேண்டும் என்ற முயற்சி அவரிடம் இயல்பாகவே இருந்தது. காலையில் 4 மணிக்கெல்லாம் எழும்பி விடுவான். பள்ளிக்கூடம் போகும்வரை படிப்பு இரவில் 7 மணிமுதல் 11 மணிவரை படிப்பார். நான் பக்கத்தில் இருக்க வேண்டும் ஆண்டு ஒன்று முதல் திறமையாகப் படிப்பார். முயற்சி எடுத்து உருவானதுதான் அவர் திறமை.

''விளையாட்டிலும் நல்ல கெட்டித்தனம். செஸ், கரம் விளையாட்டில் அவரின் அண்ணனால் கூட அவரைஜெயிக்க முடியாது. அயலில் உள்ள பிள்ளைகளுடன் கிறிக்கெட், புட்போல் விளையாடுவதும் வழக்கம். நீச்சலும் நன்றாக தெரியும். விளையாட்டு உபகரணங்கள் எல்லாம்

வாங்கிக் கொடுத்திருக்கிறோம். எங்கள் வீட்டுவளவு விசாலமானது. வீட்டுவளவில் தான் விளையாட்டு எல்லாம் ஓய்வு நேரங்களில் அம்புலி மாமா, கோகிலம், ராணிகமிக்ஸ்ஆகியனகூடுதலாக விரும்பிப்படிப்பார்கட்டுரைப்புத்தகங்கள்சரித்திரநாவல்களை விரும்பிப் படிக்கும் பழக்கமும்அவருக்கு உண்டு. வாசிப்பதைத் தொட்டுததான் கட்டுரைகள் எழுதுவார். இப்போ தைய கணித பாடம், விஞ்ஞானக் கல்வி எல்லாம் என்னால் சொல்லிக்கொடுக்கமுடியாது. ஆங்கிலத்தையும் மற்றப் பாடங்களையும்நான் வீட்டில் சொல்லிக்கொடுப்பதால் அவருக்கு பயனேற்பட்டது.

-''பிள்ளையைத் தொடர்ந்து தமிழுக் கந்தையா வித்தியாலயத்தில் படிக்கவைக்கும் உத்தேசம் உண்டா?''

-''தொடர்ந்து இங்குதான் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் ஒருபுறம் இருந்தாலும் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளையும் எடுத்துக்கூற வேண்டியுள்ளது தமிழ்க் கந்தையா வித்தியாலயத்திலிருந்து 5ஆம் ஆண்டு புலமைப் பரிசிலில் சித்தியடைந்தமாணவர்கள் வேறு கல்லூரிகளில் படிக்க வேண்டாம் என்று பெற்றோரின் மனதை மாற்றினால் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து எனது மகனும் இங்கு படிக்கலாம் அல்லது அவருக்குப் போட்டியான மாணவர்கள் இருக்கமாட்டார்கள். மகனுக்கு ஓர் ஆத்ம திருப்தி இருக்காது சித்தியடைந்த மாணவர்கள் எல்லோரும் தொடர்ந்து இங்கேயே படித்தால் எனக்கும் உடன் பாடுதான்.

- நாம் விடைபெறும் போது பிரகாஷின் தாய், 'உன் மகன் கெட்டிக்காரன். நீ அதிர்ஷ்டசாலி' என்று பிறர் புகழும் போது, ''அவதூறான கதைகள் கட்டித் திரிபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்'' என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

- பிரகாஷின் வகுப்பாசிரியை செல்வி க. பத்மினி தேவியை உடுவில் வடக்கில் அவர் வீட்டில் சந்தித்துப் பேசினோம்.

- ''மாணவர்களை கல்வி வழியில் இட்டுச் செல்வதில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பங்கும் இருக்கிறது. உங்கள் மாணவன் பிரகாஷ் தனியார் கல்வி நிறுவனத்திலும் படித்துள்ளார். இது பற்றி உங்கள் கருத்தென்ன?''

- ''ஆண்டு 5இல் பயிலும் எல்லாமாணவர்களும் ஆண்டு ஒன்று முதல் எங்கள் வித்தியாலயத்தில் தான் படிக்கிறார்கள். ஆண்டு ஒன்று முதல் கற்பித்து, முறையான இடைத்தேர்வுகளைவைத்து, புலமைப் பரிசில் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் படுத்துகிறோம். அதேசமயத்தில் ஒரு மாணவனால் ஆண்டு ஐந்தில் மாத்திரம் ரியூஷனுக்குப் போய். ஒரு வருடத்தில் ஒரேயடியாகச் சாதனையைச் சாதிக்க முடியுமென்றால் அது யதார்த்தமாகாது தனியார் கல்வி நிறுவனத்தில் ஆண்டு ஐந்துக்குப் படிப்பிக்காத பாடங்களிலும் வகுப்பில் பிள்ளைகள் நல்ல புள்ளிகள் பெறுகிறார்கள். உதாரணமாக பிரகாஷ் சுமார் 90 புள்ளிகளுக்கு மேல் வாங்கினார். அது எப்படி?'' என்று கேட்கிறார் பத்மினிதேவி அருகில் இருந்த, அதே வித்தியாலயத்தில் சுற்றாடல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் வி. பரிபூரணானந்த சர்மா, ''இப்போது ரியூஷன் ஒரு பாஷன்'' என்கிறார்.

- பிரகாஷின் தகப்பனார் இராமலிங்கம் கணேஸ்வரனின் குறிக்கோள் என்னவாக இருக்குமென அறிய அவரை, அவர் அலுவலகத்தில் சந்தித்தோம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசச் சபைச் (மானிப்பாய்) செயலாளர் அவர். வருட முடிவு கடுமையான வேலைகள் மத்தியிலும் எம்மைச் சந்தித்தார்.

- ''எனது இரண்டாவது மகனும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் படித்து 5D-3C பெற்றவர் தான். எனது மகன் பிரகாஷ் பள்ளிக்கூடத்தின் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதோடு ரியூஷனுக்குப் போனார். பள்ளிக்கூடத்து ஆசிரியர்களின் பங்கை சும்மா சொல்லக்கூடாது ஆரம்ப வகுப்பு முதல் க. பொ. த (சா-த) வரை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் கல்விச்சூழல் நன்றாக உள்ளது'' என்று சொன்னார்.

''பெரியபள்ளிக்கூடங்களில் ஊடாட்டம்அதிகம் பலஇடங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து படிப்பார்கள். யாழ் இந்துக்கல்லூரியில் மகனைச் சேர்ப்பதா இல்லையா என்பது பற்றி இன்னும் தீர்மானம் எடுக்க வில்லை.'' என்று ஓர் நிர்வாகிக்குரிய திறமையுடன் பதிலளித்தார்.

## விடுதலை இலக்கியம் படைத்த பெண்ணுக்கு நோபல் பரிசு

ஸ்வீடிஷ் அக்கடமி 1993க்கான இலக்கிய நோபல் பரிசை அறிவித்தவுடன் ஆச்சரியப்பட்டவர்களில் முதல் நபர் அந்த பரிசைப் பெற்ற டோனி மாரிசன் என்ற ஆபிரிக்க அமெரிக்க எழுத்தாளரான பெண்மணிதான். இவ்வாண்டு அமெரிக்காவிற்கே நோபல் பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்தாலும் இலக்கிய வட்டாரத்தில் எதிர்பார்த்தது தாமஸ்பின்சன் என்ற எழுத்தாளருக்கோ, அல்லது ஜாய்ஸ் காரல் ஓட்ஸ்என்றபெண்மணிக்கோதான். அவர்கள் ஊகத்தில் கறுப்பின எழுத்தாளரான டோனி மாரிசன் வரவில்லை. இவ்ஆண்டு அவர் அடையப் போகும் பரிசுத் தொகை ஐந்து கோடி ரூபாக்கள்

அவர் இதுவரை ஆறு நாவல்கள் எழுதியுள்ளார் அநேகமாக எல்லாமே கிட்டத்தட்ட தன் வரலாறு போன்றவைதான். அமெரிக்காவில் நீக்ரோவாக வாழ இருப்பதற்கான சூழ்நிலையில் ஏற்படும் வரலாற்று ரீதியான சமூக இறுக்கங்களும், நசுக்கங்களுமே அவர் நாவலின் மையக் கரு. லட்சக்கணக்கான நீக்ரோக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த இறுக்கங்களை அவருடைய வாசகர்கள் இன்று அனுபவித்து வருகிறார்கள். அதனால் டோனி மாரிசனுக்கு வாசகர்கள் கூட்டம் அதிகம்

1931இல் குத்தகை விவசாயி ஒருவரின் இரண்டாவது மகளாகப் பிறந்த டோனி இளம் வயதிலேயே இனக் கொடுமையை அனுபவித்தவர் குடியிருந்த தங்கள் வீட்டிற்கு நான்கு டொலர் வாடகை பாக்கி என்பதற்காக குடும்பத்தினரை உள்ளேவைத்து வீட்டையே தீக்கொளுத்த முயற்சித்த வெள்ளை இனத்தின் அராஜகத்தை அவர் இளம் வயதில் கேள்விப்பட்டார் மிகச்சிறியவிஷயத்திற்காக தன் வீட்டைக் கொளுத்த நினைத்த அந்த வெள்ளை இன வெறி அவர் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. ஹோவர்டு பல்கலைக்கழகத்தில் உயர் படிப்பு படித்த டோனி வில்லியம் ஃபாக்னர் வர்ஜினியா உல்ஃப் இவர்களின் படைப்புக்களில் தற்கொலை மனோபாவம் பற்றி ஒரு ஆய்வுரை எழுதி எம். ஏ. பட்டம் பெற்றார். கொஞ்சம் கொஞ்சமா கஃபாக்னரின் செல்வாக்குக்கு ஆளானார். அவரது முதல் நாவல் நீலக்கண்கள் (1970)

ஹோவர்ட் பல்கலைக்கழத்தில் இருந்தபோது ஜமாய்க்கா கட்டட நிபுணர் ஹரால்டு மாரீசனை மணம் புரிந்து கொண்ட டோனி இரண்டு பிள்ளைகள் பிறந்தவுடன் அவரிடமிருந்து பிரிந்து விடுகிறார்.

நியூயோர்க்கில் ராண்டம் ஹவுஸ் என்ற பதிப்பாளரிடம் நூல் ஆசிரியராக பணியாற்றிய டோனி பதிப்பு துறையில் மகத்தான வெற்றி பெற்றார். சூலா, சாலமனின் பாட்டு போன்றவைகள் அவர் நாவல்கள் 'பிலவ்ட்' என்ற நாவல் புலிட்சர் பரிசுபெற்றது;

இவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டபோது இவரைப்பற்றி ஸ்வீடிஷ் அக்கடமி சொன்னது. ''இனக் கொடுமையின் விலங்குகளிலிருந்து தன் மொழியை விடுவிக்கும் இவர் திரும்ப திரும்ப அந்த மொழியிலேயே உழல்கிறார்'' இதை அமெரிக்க படைப்புலகம் மறுக்கிறது. 'தன் கதாபாத்திரங்களின் கறுப்புத்தன்மையிலிருந்து விடுபட்டு பொதுவான மொழியைத்தான் அவர் கையாளுகிறார். அது எல்லாருக்கும் புரியும் படியான மொழி' என விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.




## நிஜங்கள்

அணைத்து நிரோவிற்கு முத்தம் கொடுத்தாள் செபமாலை.

அந்த ஏழ்மையிலும் அன்பைப் பகிர செபமாலை காட்டிய அக்கறை கண்டு பேசாமடந்தையாய் பத்மா தன்வீட்டையும் அவளையும் ஒரு கணம் மாறி' மாறி வெறித்துப் பார்த்தவளாய் சுயநினைவுக்கு வர தன் வெறுமையை உணர்ந்து கால்கள் போன பாதைக்கு செபமாலையுடன் நடந்தபோது பங்கருக்குள் இருந்தவர்களும் சேர்ந்து கொண்டனர் குருசு முத்தர் நிரோவைத் தூக்கிச் சென்றார்அப்போதுமீண்டும்நிரோவின் நினைவலைகள் வார்த்தையாய் வெளிவந்தன.

''அம்மா. அம்மாஇன்றைக்குப்பாலன் பிறப்பாரா? ? என்றுவிடாமல் ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டான்.

''ஓம், நிரோசத் தம் போடாமவா. என்ற பத்மாவின் கரகரத்த குரலும் கண்ணீர்த் துளிகளும், நிரோவின் ஆர்வமும் குருசுமுத்தரின் மனதைக் குடைந்தது.

'' பாலன் பிறக்கப்போறார் நிரோத் தம்பி. ஆனா மாடியிலும் இல்லை. மனைகளிலும் இல்லை. நல்ல மனங்களில்தான் சின்னப் பாலன் பிறப்பார். என்ற'' குருசு முத்தரின் குரலுக்குப் பதிலாக அந்தப் பயணத்தில வந்த ஒருவர், ஆண்டவன் ஒருவன் இருந்தா இதெல்லாம் நடக்குமா? எல்லா அழிவும் எங்களுக்குத்தானே நடக்குது அண்ணே'' என்ற விரக்திக்குரல் வீச்சாக வந்தபோது.

''ஏ, பிள்ளை,இந்தஅழிவுக்குள்ள தான் நல்ல ஆக்கங்களும் பிறக்குது. இப்பஎல்லாம் ஆண்டவனை ஆலயத்திலமட்டும் தேடி அலையிறத விட்டிட்டு' பசியாய் இருந்தேன், தாகமாய் இருந்தேன்' ஆடையின்றி இருந்தேன்' சிறைப் பட்டிருந்தேன் என்ற வார்த்தைகளை வாழ்க்கையில காணிறதில தான் அந்த ஆண்டவனையே தரிசிக்கலாம், என்ற படி குருசு முத்தரின் கூற்றுடன் செபமாலையின் கொட்டிலுக்குள் புகுந்து கொண்டபோது அந்த நடுச்சாமத்தில் எழுந்த மணி ஓசை எல்லோர் மனதிலும் பாலன் பிறப்பின்நினைவுகளை உணர்த்தஎல்லோரும்ஓர்கணம் மண்டியிட்டுபுதியபிறப்பின் அர்த்தத்தை அனுபவத்தில் கண்டு வியந்தனர்.

## ஈராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:

**09-06-1978**

தாயக மண்ணில்:

**24-12-1991**

### வீரவேங்கை இளம்பருதி

(சிவகணேசன் கைலாயநாதன்)

தாயகத்து மண்மடியில் உறங்குகின்ற மாவீரா
மறத்தமிழா!
தாங்காத துயரத்தால் தந்தையுமோ உனைத்தேடி
பறந்துவிட்டார்
தனிமரமாய் அக்காவும் துணையிழந்த அம்மாவும்
தவிக்கின்றோம் உம்மை எண்ணி

இவருடன் வீரச்சாவைத் தழுவிய வாணன், சீராளன் ஆகியோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

உன்பிரிவால் வாடும்
அம்மா (சிவா) அக்கா (டிற்றா)
உறவினர்கள்.

(6960)

## 6-ம் ஆண்டு நினைவுநாள்



மலர்வு: 14- 5- 1925

உதிர்வு: 30- 12- 1987

அமரர்

### பொன்னுத்துரை முத்தாபரணம்/ சஞ்சா

(உரும்பராய் கிழக்கு)

ஆறு ஆண்டுகள் சென்றால் என்ன அறுபது ஆண்டுகள் சென்றால் என்ன எம் நெஞ்சை விட்டு அகலாத உங்கள் திருமுகம்.

தகவல்: பொ. குமாரசேகர்
சிறீகோணேஸ் ஸ்ரோர்ஸ்,
நுணாவில் சந்தி.

மக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

(சி-8188)

## 45-ம் நாள் நினைவு...!



பிறப்பு:

1967-05-31

வீரச்சாவு:

11-11-1993

### லெப். கேணல் சூட் (அருணன்)

(நவரெட்ணம் விக்னராஜன்)

நீ......
காவிய நாயகர் கண்ணில் நின்றெழுந்து
களத்திடை பாய்ந்த தீப்பிழம்பு!
நிலத்திடை வீழ்ந்துடல் வித்தென ஆகியும்
நின் நினைவுகள் பகைவர்க்கு அம்பு!
மறக்குமோ மனமுனை மறையுமோ உன்முகம்
பதைக்குதே நெஞ்சம். பயணங்கள் தொடரும்...!

இன்று 24-12-93 எமது இல்லத்தில் இவரின் நினைவாக வழங்கவிருக்கும் மதியபோசனத்தில் அனைத்துப் போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்றைய நிகழ்வில் இவருடன் வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலியை காணிக்கை ஆக்குகின்றோம்.

(சி-8190)

-குடும்பத்தினர்

## நெஞ்சத்தை நெருடும் நீங்காத நினைவலைகள்...



பிறப்பு: 28 | 01 | 65

அழிப்பு: 26 | 08 | 89

### பொ. முருகமூர்த்தி (ராசா)

மண்மீது பற்றுக் கொண்டதால் மறவர் படையணிக்கு உதவிகள் பல செய்தாய் அதற்காக துரோகிகள் உன் உயிரையே எடுத்தார்கள். நீ விட்டுச் சென்ற பணிகளை உன்தம்பி தொடர்ந்தான். இன்று அவனும் மாவீரனாகி விட்டான். இப்பொழுது விழுதுகள் வேரோடி பொழுதுகள் புலர்கின்றன.

உங்கள் பிரிவைத் தாங்கமுடியாது
தவித்து வாழும்
க. பொன்னுத்துரை
குடும்பத்தினர்
''செல்வ பவனம்''
சங்கத்தார் வயல்.



பிறப்பு: 05 | 08 | 66

வீரச்சாவு: 24 | 12 | 92

முல்லைத்தீவு கோட்ட சிறப்புப் பொறுப்பாளர்

### மேஜர் செங்கோலன்/ செங்கோல் மாஸ்ரர்

(பொ. பாலமுருகேசு)

மகனே!

இந்த மண்ணின் விடுதலை வேண்டி மறவர் படையணியில் சேர்ந்தாய் மணலாற்றுக் களத்தினிலே முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தாய். முடிவில் கொக்குத்தொடுவாயில் எதிரியுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டாய். ஆனாலும் நீ உருவாக்கிய ஆயிரமாயிரம் புலிவீரர்கள் உன்இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வார்கள்.

(6973)

# 45-ம் நாள் நினைவஞ்சலி



முன்னாள் யாழ் மாவட்ட புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர்

# லெப்.கேணல் சூட்/அருணன்

தாயின் மடியில்:
31. 05. 1967

(நவரெட்னம் விக்னராஜன்)
பருத்தித்துறை வீதி, நல்லூர்

தாயக மடியில்:
11. 11. 1993

வேட்டெனவே பாய்ந்து வரும், "சூட்" எனும் மெட்டான வார்த்தை!
"வேர்கள்", விழுதுகள் துளிர்க்க, வார்த்தான் தனது வேர்வை! - துரோக
"போர்வை" களைய மூர்க்கமானதால், இவன் "முள்" என்றதே பல பார்வை!

ஆர்த்து இவன் எழுந்தாலும், மென்மையில் பல் ஆயிரம் "மலர்" களின் கோர்வை;
கூர்மை கொண்ட சொல் - செயலில் குன்றிடாத "வீரர்" பலரின் சேர்வை!
போர் "தவளை" என நுழைந்து, தலை பல சரித்து சரித்திரமானதே மற வேங்கை!

பூநகரியில் உதிர்ந்த பூ உருவே! புயல் கருவே!!
புகுந்து நீ புகட்டிய பாதையில் ஓங்குமே எம்கை!

(7000)

- நண்பர்கள்

Branch Library

# கொலம்பிய அரசை ஆட்டிப்படைத்த கடத்தல் மன்னன் எஸ்கோபர்

உலகிலேயே மிக அதிகமாகத் தேடப்பட்டு வந்த 'கொக்கெயின்' எனும் போதைப்பொருள் கடத்தல்காரன் இருவாரங்களுக்குமுன் கொலம்பியஅதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். பப்லோ எஸ்கோபர் என்னும் இவன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து கொலம்பிய அரசு நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறது. அமெரிக்க அரசிற்கோ மிகுந்த மகிழ்ச்சி. அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் கொலம்பிய அரசிற்கு பாராட்டு தெரிவித்துள்ளதுடன் இந் நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார். மேற்கத்திய நாடுகள் நிம்மதி அடைந்துள்ளன.

அமெரிக்காவிற்கும் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பப்லோ எஸ்கோபர் பெருத்த தலையிடியாக இருந்து வந்தான். மிகப் பெரும் பணக்காரரான இவனின் சொத்து மதிப்பு மட்டும் 300 கோடி டாலர்கள். இதுவும் சரியான மதிப்பீடல்ல.

ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த இவன் 44 வயதுக்கும் பெரும் பணக்காரர் ஆகியது எவ்விதம்? கொக்கா செடி பயிரிடுவது மூலம், கொக்கெயின் தயாரிப்பு, கடத்தல் மூலம் பெரும் பணம் சம்பாதிக்கலாம் என்ற உண்மை தெரிய வந்ததும் கொலம்பியா, பெரு, பொலிவியா நாடுகளில் கொக்கெயின் தயாரிப்பு முக்கிய இடத்தைப் பிடித்தது. கோடீஸ்வர போதைப் பொருள் அதிபர்கள் தலையெடுக்க ஆரம்பித்தனர். இவர்களுக்கு கீழே போதைப்பொருள் தயாரிப்போர், கடத்துவோர், விற்பனை செய்வோர், கண்காணிப்போர் என ஒருபடையே வேலை செய்து வந்தது. போதைப் பொருள் விவகாரத்தில் தொடர்புடைய அனைவருமே பெரும் பணம் சம்பாதிக்க முடிந்தது.

எழுபதுகளில் ஆட் கடத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பப்லோ சிறிய அளவில் கொக்கெயின் கடத்தலில்இறங்கினான். 25 வயதில் கொக்கெயின்கடத்தல் புள்ளி என்ற பட்டம் கிடைத்து விட்டது. ஆனாலும்தன்னை ஒருவாகன விற்பனையாளன்என்றும் விவசாயி என்றும் காட்டிக் கொண்டான். எழுபதின் இறுதிப் பகுதியில் எஸ்கோபர் கடத்தல் மன்னனாகி விட்டான். அவனுக்குக்கீழ்கொழுத்த சம்பளத்தில் ஏராளமான ஆலோசகர்கள், கணக்காளர்கள், என பலர் வேலைபார்த்தனர். அவன் தனக்கென ஒருஇராணுவத்தையும் அமைத்துக் கொண்டான்.

இலட்சக் கணக்கில் டாலர்கள் அவன் மடியில் கொட்ட ஆரம்பித்ததும் ஹோட்டல்கள், மாளிகைகள் என்றும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணியென்றும் வாங்கத் தொடங்கினான். கொலம்பியாவில் மக்தலேனா ஆற்றுக் கரையோரத்தில் பல்லாயிரம் ஏக்கர் காணியில் இவன் அமைத்த மிருகக் காட்சிச் சாலை பிரபல்யம் பெற்றது.


கொலம்பியாவின் உயர் பொலிஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள், நீதிபதிகள் என பலரையும் பண பலத்தின் மூலம் கைக்குள் வைத்திருந்தான். பணத்தின் மூலம் சரிக்கட்ட முடியாதோரை தீர்த்துக் கட்டினான். இவர்களில் நீதிபதிகள், பொலிஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள், ஜனாதிபதி வேட்பாளர் என பலர் அடங்குகின்றனர்.

தான் ஏழ்மையில் உழன்றதைக் கடைசிவரை எஸ்கோபர் மறந்துவிடவில்லை. தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களைஅவன் வெறும்கையோடு அனுப்பியதில்லை ஏழை மக்களுக்கு பெரியளவில் உதவினான். இருநூறுக்கு மேற்பட்ட வீடுகளை அமைத்து அவர்களுக்கு வழங்கினான். தான் அரசியலிலும்கொடிகட்டிப்பறந்துநாட்டின் ஜனாதிபதியாகவும் ஒருநாள்வரவேண்டும்என கனவுகாணத்தொடங்கிய எஸ்கோபர் 1982இல் தேர்தலில் போட்டியிட்டு காங்கிரஸ் உறுப்பினரானான் ஆனால் அவன் அரசியலில் இருப்பதை ஏனைய அரசியல்வாதிகள் விரும்பவில்லை. ஏனெனில் கொலம்பிய அரசியல் வாதிகளில் பலர் அவனிடம் லஞ்சம் பெற்றிருந்ததே காரணமாகும்.

எஸ்கோபர் தன் மொத்த போதைப்பொருள் ஏற்றுமதியில் 85 சதவீதத்தை அமெரிக்காவிற்கு அனுப்பிகொண்டிருந்தான். தொன்கணக்கில் அங்கு சென்ற போதைப்பொருளினால்அமெரிக்காவின் கவனம் இவன்மீது திரும்பியது. அவனை நாடு கடத்துமாறு கொலம்பிய அரசை கேட்டுக் கொண்டது.

தான்கைதுசெய்யப்பட்டால் அமெரிக்காவுக்குநாடுகடத்தப் படலாம்என உணர்ந்து கொண்டஅவன் கொலம்பியஅரசுடன்பேச்சுவார்த்தைநடத்தி நிபந்தனைகளுடன் சரணடைந்தார். அவனுடன்இவனுடைய நெருங்கிய உதவியாளர் 12 பேரும் சரணடைந்தனர்.

அடுத்து மலைமீது அமைக்கப்பட்ட விசேட சிறைச்சாலையில் அவன் வைக்கப்பட்டான் இச்சிறைச்சாலையை நிர்மாணித்தது எஸ்கோபரின் கட்டட வடிவமைப்பாளர் என்பது வேடிக்கையானது.



சிறை கட்டப்பட்டதும் அவன் காணியில்தான் சிறைச்சாலையைகாவல்செய்பவர்களும் அவனால்தெரிவுசெய்யப்பட்டவர்களே, அவன்தங்கும் அறை விளையாட்டு, நூலகம் வீடியோ போன்ற நவீன வசதிகளுடன் விருந்தினர் அறை உதைபந்தாட்ட திடல் என சகலவசதிகளுடனும் சிறை அமைக்கப்பட்டது. மேலும் அவனதுசெலவுக்கென மாதம் 10 கோடி டாலர்களை கொலம்பிய அரசு ஒதுக்கியது சிறையில் இருந்தாலும் அவனது உதவியாளர்கள் மூலம் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டே வந்தான்.

வசதியான சிறையில் இருந்தபோதும் அமெரிக்கர்களும் தனது எதிராளிகளும் தம்மை கொல்லலாம் என நினைத்து 1992 ஜூலையில் சிறையை விட்டுவந்தான். இவன்தப்பிச் சென்றது கொலம்பியாவிற்கும் அமெரிக்காவிற்கும் பெரும் தலையிடியைத் தோற்றுவித்தது. அவனைப் பற்றி தகவல் தருவோருக்கு 60இலட்சம் அமெரிக்க டாலர் சன்மானம் என கொலம்பியா அறிவித்தது.

தப்பிச் சென்ற எஸ்கோபர் அரசிற்கு எதிராக ஒரு யுத்தத்தையே நடத்தினான் கடைசியில் இரு வாரங்களுக்கு முன் மெடலின் நகரின் ஒதுக்குப்புறமான மாடிக்கட்டடம் ஒன்றில் வைத்து எஸ்கோபர் சுட்டுக்கொல்லப்பட்டான்.

# முன்னணி அணிகள் சில கோட்டைவிட்ட 1994 உலக கிண்ண உதைபந்தாட்டம்

உதைபந்தாட்ட ரசிகர்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிகள் 1994இல் அமெரிக்காவில் நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் பங்குபற்றவிருக்கும் அணிகள் தெரிவு செய்யப்பட்டுவிட்டன. இப்போட்டிகளில் இரண்டு தடவைகள் உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்ட இங்கிலாந்து, பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாடுகளின் உதைபந்தாட்ட அணிகள் கலந்து கொள்ளப் போவதில்லை. இந்நாடுகள் தத்தமது குழு நிலை தகுதிகாண் வட்டப் போட்டிகளின் கடைசி ஆட்டங்களில் தோல்விகளைத் தழுவியதால் அமெரிக்கா செல்லும் வாய்ப்பை இழந்தன.

கடந்த நவம்பர் 17ஆம் திகதி தகுதிகாண் வட்டப் போட்டிகள் ஐந்து கண்டங்களிலும் இரண்டு வருடங்கள் நீடித்து நடைபெற்றது. மொத்தம் 497 போட்டிகள் நடைபெற்றன. ஆசியக்கண்ட பிராந்தியப் போட்டிகளில் சிறிலங்கா பங்குபற்றியதாயினும் அதுபடுதோல்வி அடைந்தது பிரான்ஸ்பல்கேரியவிடம் தோற்றுப் போனதையடுத்து உலகக் கிண்ணத்தில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தது 1994இல் உலகக் கிண்ணப் போட்டியை நடாத்தும்அமெரிக்காவும் 1990 இல் உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்ட ஜெர்மனியும் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகியுள்ளன- மேலும் மும்முறை உலகக் கிண்ணம் பெற்ற பிரேசில், இத்தாலி ஆகிய நாடுகளும் அமெரிக்கப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன-

நவம்பர் 17ம் திகதி நடைபெற்ற பதினொரு தகுதிகாண் வட்டப் போட்டிகளில் கடைசியாக விளையாடப்பட்ட ஆர்ஜன்ரீனா - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான போட்டியில் அதிர்ஷ்டவசமாகவெற்றியீட்டிய ஆர்ஜன்டீனாவும் உலகக் கிண்ணப்போட்டிகளில் பங்குபற்ற தகுதிபெற்றது. அப்போட்டியில் மரடோனாவின் பங்களிப்பு அவசியமாகியது- அவரது பந்துப் பரிமாற்றம் பெர்னான்டோ ரெடொண்டோவிடம் போக அவர் அதனைசேப்றியல் பட்டிஸ் ருடாவிற்குப் பரிமாறினார். பட்டிஸ்ருடா அதனைபலமாக அடிக்க அவுஸ்திரேலியாவின் பின்வரிசை வீரர் அலெக்ஸ் டொபினியின் அகல விரிந்த பாதங்களில் பட்டு திசைதிரும்பிய போது கோல் காப்பாளர் ரொபர்ட் ஸபிக்காவின் தலைக்கு மேலால் சென்று கோலினுள் வீழ்ந்த போது ஆர்ஜன்டீனா உலக கிண்ணப்போட்டிக்குத் தகுதி பெற்றது. இன்னும்ஒரு விறுவிறுப்பான ஆட்டமாக அமைந்த இத்தாலி - போர்த்துக்கல் போட்டி சான்சிரோவில் இடம்பெற்றபோது இரு அணிகளில் எந்த நாடு வெற்றிவாகை சூடுகின்றதோ அந்த நாட்டுக்கு அமெரிக்கா செல்வதற்கான வாய்ப்பு கிட்டவிருந்தது. ஏறத்தாழ80,000 இத்தாலிய உதைபந்தாட்ட பிரியர்கள் பதற்றத்துடன் கண்டுகளித்த அப்போட்டியில் ஏழு நிமிடங்கள் மாத்திரமே எஞ்சியிருந்த வேளையில் டினோபகியோ இத்தாலியின் வெற்றியை (1-0) உறுதி செய்தார்.

இதேபோன்று இன்னுமொரு பரபரப்பை உண்டு பண்ணிய ஆட்டம் அயர்லாந்து - வட அயர்லாந்து போட்டியாகும். அண்மைக் காலமாக மதரீதியானகசப்பு உணர்வுகளினால் இரு நாடுகளுக்கிடையேயான உறவுகள் விரிசலடைந்திருந்த வேளை அப்போட்டியை பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் அரசியலுக்குஅப்பால் மதப் பிரச்சினைக்கு அப்பால் விளையாட்டு வெற்றி கண்டது.

வடஅயர்லாந்தில் இடம் பெற்ற இப் போட்டியில் வட அயர்லாந்திற்கு வெற்றியும் அயர்லாந்துக்கு சமநிலையும் தேவைப்பட்டது. ஆட்டம்73 ஆவது நிமிடத்தைத் தொட்ட போது ஜிம்மிகுவின் வடஅயர்லாந்துக்கு கோல் பெற்றுக் கொடுத்தபோது அவ்வணியின் ஆதரவாளர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஆனால் நான்கு நிமிடங்களே நீடித்த இந்த மகிழ்ச்சி ஆரவாரம் அலன் மக்லோலினால் கோல் நிலை சமப்படுத்தப்பட்டபோது முடிவிற்கு கொண்டுவரப்பட்டது,

ஒலிம்பிக் போட்டிகளின் தாயகமான கிரிஸ் உலக கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் முதல் தடவையாக இறுதி வட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. இதேபோன்று ஆசியப் பிராந்தியத்திலிருந்து சவூதிஅரேபியா முதல் தடவையாக விளையாடத் தகுதி பெற்றுள்ளது இப்பிராந்தியத்திலிருந்து தொடர்ந்து மூன்றாவது தடவையாக தென் கொரியா.

1986இல் உலக கிண்ணத்தைப் பெற்ற ஆர்ஜன்டீனாவை 1990 இல் இத்தாலியில் நடைபெற்ற போட்டியில் முதலாவது ஆட்டத்தில் பிரமிக்கத்தக்க வகையில் வெற்றி கொண்ட கமறூனும், நைஜீரியாவும் தகுதி பெற்றுள்ளன. 28 வருடங்களின் பின் சுவிட்சர்லாந்தும் உலக கிண்ணப் போட்டியில் கலந்துகொள்கின்றன.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டிகளில் 1994 இல் ஜெர்மனி மீண்டும் உலகக் கிண்ணத்தைப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் பிரேசில், ஆர்ஜன்டீனா, இத்தாலி என்பனவும் கடுமையாகபோட்டியிடலாம். 1994 ஜுன் 17 முதல் ஜுலை 17 வரை அமெரிக்காவில் நடை பெறவுள்ள உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிகளில், ஆர்ஜன்டீனா, பெல்ஜியம். பொலிவியா, பிரேஸில், பல்கேரியா, கமறூன், ஜெர்மனி, கிறீஸ், அயர்லாந்து, இத்தாலி, மெக்ஸிகோ, மொரோக்கோ, நெதர்லாந்து, நைஜீரியா, நோர்வே, ருமேனியா, ரஷ்யா, சவூதி அரேபியா, தென் கொரியா, ஸ்பெயின் சுவிடன், சுவிற்ஸலாந்து, ஐக்கிய அமெரிக்கா என்பன விளையாடுகின்றன ஐக்கிய அமெரிக்காவில் போட்டி நடப்பதனால் வரவேற்பு நாடாகிய அது இயல்பாகவே உலகக்கிண்ணப்போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

# பதவி வெற்றிடம்

வெற்றிடம்-: 01. கணக்காளர்
02. கணககு எழுதுநர்
03. எழுதுநர்
04. வெளிக்கள உத்தியோகத்தர்
05. தட்டெழுத்தாளர்

## தகைமைகள்:-

கணக்காளர் (முன் அனுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்)

கணக்கு எழுதுநர்
எழுதுநர்
வெளிக்கள உத்தியோகத்தர் ] - (சுணக்கியல், வர்த்தகம், பொருளியல்) (க.பொ.த. உயர் தரப்பரீட்சை சித்தி) (புவியியல்)

தட்டெழுத்தாளர் - ஆங் க.பொ.த. சா/தரம், நிமிடம் 30 சொற்கள்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: 22-40

விண்ணப்ப முடிவுத்திகதி 30.12.1993

அனுப்பவேண்டிய முகவரி:-

தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
யாழ். மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

குறிப்பு: சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
அவ்வவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவே நியமனங்களும் வழங்கப்படும்.

(சி-8184)

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம்
வரைவுள்ளது வட்டுக்கோட்டை

## 35-வது ஆண்டுப் பொதுக் கூட்டம்

**28.12.93 செவ்வாய்க்கிழமை (பூரணை நாள்) காலை 9.30 மணி**

மேற்படி சங்கத்தின் 35-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 28.12.93 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சித்தன்கேணியில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. கே. எஸ் அருளானந்தர் தலைமையில் நடைபெறும். தனித்தனி அறிவித்தல்களும் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அங்கத்தவர் நலன் கருதி இவ்வறிவித்தலையும் தங்களது மேலானகவனத்திற்கு அறியத்தருகின்றோம்-

நன்றி
சங்கச்சேவையில்

செ. இ ஆனந்தராசா
பொது முகாமையாளர் த. மு. கதிர்காமநாதன்
கௌரவ செயலாளர்

சி/ 8189

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

### ஆண்டுத் திதியும்



தாயின் மடியில்
**05 - 08 - 1974**

மண்ணின் மடியில்
**28 - 12 - 1990**

**வீரவேங்கை பாலா**
**(இராசையா தவநேசன்)**

நாவற்காடு,
அச்சுவேலி.

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

(6772)

## சமையலுக்கு நவீன குக்கர்

சூரிய சக்தியைப் பயன்படுத்தி சமையல் செய்யக்கூடிய நவீன குக்கர் ஒன்றை ஜேர்மன் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்திச் சென்னையிலுள்ள சிறுதொழில் நிலையம் ஒன்று உற்பத்திசெய்யவுள்ளது இக் கருவியைப் பயன்படுத்தி இருபத்தைந்து பேருக்கான உணவை ஒரே நேரத்தில் தயாரிக்க முடியும் எனவும், இதுகாலவரை பயன் படுத்தப்பட்டுவரும் சூரிய சக்திக் குக்கர்களை விட அதி நவீன தொழில் நுட்பம்கொண்டதாக ஜேர்மன் பேராசிரியர் ஒருவர் இதனைக் கண்டுபிடித்துள்ளார்எனவும்கூறப்படுகிறது இந்தியா, சிலி, நமிபியா மாலைதீவுபோன்ற வளரும் நாடுகளில் ஜெர்மனியின் செலவில் இக்கருவி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

மருத்துவமனைகள், சத்துணவுக்கூடங்கள், முதியோர்இல்லங்கள், தொழிற்சாலைஉணவகங்கள்போன்றவற்றில் இக்கருவி உபயோகப்படக்கூடும் எனவும் சூரிய சக்தி இல்லாதபோதும் கூட இதனைப்பயன்படுத்த முடியும் எனவும் கூறப்படுகிறது.

## தரமற்ற பட்டாணி விநியோகம்

(பருத்தித்துறை)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கு வெள்ள நிவாரணமாகவழங்கப்பட்ட பட்டாணிக் கடலை தரமற்ற பாவனைக் குதவாத பட்டாணிக் கடலையாக இருப்பதாகப் பாவனையாளர்கள் பலத்தபுகார் செய்துள்ளதோடு இத்தரமற்ற பாவனைக் குதவாத பட்டாணிக் கடலையை விநியோகம் செய்ய வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(25)

புத்தூர் வளர்மதி பாலர் பாடசாலை
அபிவிருத்தி நிதிக்கான

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு: 1993
இரண்டாம் பரிசு 3604
மூன்றாம் பரிசு 1713

### ஆறுதல் பரிசில்கள்

1. 4518
2. 0426
3. 1729
4 2427
5. 0638
6. 2748
7. 0852
8. 3096
9. 1236
10. 1252

பரிசில்களை எதிர்வரும் 14-01-94 இற்கு முன்னதாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமிடம்:-

**வளர்மதி ச. ச. நிலையம்**
**சுன்னாகம் வீதி,**
**புத்தூர்**

திரு. மா. பரமானந்தம்
(பாலர் பாடசாலை தலைவர்)

இங்ஙனம்
பாலர்பாடசாலைநிர்வாகிகள்

(சி-7016)

விழாக் காலங்களில் பஞ்சாமிர்தம்
தயார் செய்ய
**பலாப்பழம் கிடைக்கவில்லையா?**
அல்லது
**விலை அதிகமா?**
கவலையை விடுங்கள்
**இன்றே ரேஸ்ரி அளிக்கும்**
**பலாப்பழ அமிர்தம்**
உங்கள் தேவையை பூர்த்தி செய்கிறது.
முற்றிலும் தூய்மையாக்கப்பட்டது.
TASTE LINE INDUSTRIES (PVT) LTD
14, Seeniar Lane, Jaffna. (சி-8197)

## ஓராண்டு நினைவஞ்சலி



**கப்டன் சுரேந்தர்**
**(ஆனந்தசாமி ஆனந்தராஜ்)**
அன்புவழிபுரம் திருமலை

திருமலையின் மைந்தனாய்
**14.06.1970**

இதயபூமியின் வரலாற்றில்
**24.12.1992**

மண்ணின் மீட்பு ஒன்றே
எண்ணத்தில் நிறைந்ததால்
உறவை ஊரை உற்றாரை
துறந்து இணைந்தாய் படையணியில்
இலட்சியம் ஈடேறும் நாள் வரையில் - நீ
தாங்கிய கருவி தூங்காது - இது உறுதி.

குடும்பத்தினர்.

(6950)

## ஓராண்டு நினைவஞ்சலி

தவ மணித் தாய் மலராய்:
19 — 09 — 1976



தமிழீழத் தாய்வித்தாய்:
24 — 12 — 1992

**லெப். விதுர்சன்**
**(கதிரவேல் கவந்தீசன் (காண்டீபன்)**
**திதி: 12 - 01 - 1994**

மணலாறு கொக்குத்தொடுவாயில் இவருடன் இணைந்து களமாடி எதிரியை சிதறடித்த மேஜர் செங்கோலன், கப்டன் சுரேந்திரன், கப்டன் கல்கி, லெப் அமுதன், லெப். மருதன், லெப். இளங்கோ ஆகியோருக்கும் எமது வீர அஞ்சலிகள்.

ஆரியன் தோட்டம்,
அல்வாய் தெற்கு

குடும்பத்தினர், நண்பர்கள்

7001

# சிறிலங்காவில் வேண்டாத மாகாண சபைகள் உருவாக்கியுள்ள புதிய நெருக்கடிகள்

தென்னிலங்கையில் மாகாணசபைகளைக் கைப்பற்றுவதற்காக எழுந்துள்ள அதிகாரப் போட்டியானது, சிறிலங்கா அரசியலில் பல புதிய பரிணாமங்களை உருவாக்கும் கட்டம் வரையில் சென்றுள்ளது. இதில் சுவாரசியமான விடயம் என்னவெனில்வடக்கு-கிழக்கில் எழுந்த இனப்பிரச்சினையை தீர்க்கவென உருவாக்கப்பட்ட மாகாணசபை அமைப்பு, இன்று வடக்கு - கிழக்கு அரசியலில் காத்திரமான பங்கு எதுவும் வகிக்காத நிலையில் தென்னிலங்கை அரசியலில் பெரும் அரசியல் நெருக்கடிகளுக்கு வித்திட்டமைதான்.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக மாகாண சபைகள் 1987ஆம் ஆண்டு இந்திய சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின் மூலம் உருவாக்கப்பட்டபோது மேலதிக ஒன்றாக காரணமின்றி சிறிலங்காவிற்குள் புகுத்தப்பட்டது. ஆனால் எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது மாகாணசபை அமைப்பை வன்மையாக எதிர்த்தது. இதற்கு எதிராகப் பொதுக்கூட்டங்கள் நடத்தியதோடு, போராட்டங்களையும் ஏற்பாடு செய்தது. முதலாவது மாகாணசபை தேர்தலையும் புறக்கணித்தது.

ஐக்கிய தேசியக்கட்சியோ மாகாணசபைகளை உருவாக்கிய அரசாங்கம் என்ற ரீதியில்மாகாணசபைகளை ஆதரித்தது. ஆனால் பிரதான எதிர்க்கட்சி போட்டியிடாத நிலையில். மாகாணசபைகள் யாவும் ஐ. தே. கட்சியின் கட்டுப்பாட்டினுள்ளும் இருந்தன. இதன் காரணமாக மாகாண அரசுகளுடன் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகவோ அன்றி வேறு நெருக்கடிகளோ உருவாகவில்லை. உன்னிடம் இருந்தால் என்ன? என்னிடம் இருந்தால் என்ன? என்ற நிலையில் மத்திய மாகாண அரசுகளுக்குஇடையில் பிரச்சினை எவையும் தோன்றவில்லை.

ஆனால் இவ்வருடம் இடம் பெற்ற மாகாணசபை தேர்தலில் எதிர்க்கட்சிகள் பங்கு பற்றியதோடு சில மாகாண சபைகளைக் கைப்பற்றிய போது அரசியலில் மாகாண சபை விவகாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது. மாகாண சபைகள் தமிழ்மக்களுக்கு தமிழீழத்தை வழங்குவதற்கு ஒப்பானது என ஆரம்பத்தில் பிரசாரப்படுத்திய சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாகாண சபைகளுக்கு என தனிப்பட்ட அதிகாரங்கள் எவையும் இல்லை எனக் குரல் எழுப்பியது. மத்தியில் உள்ள அரசாங்கம் எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மாகாணங்களைப் புறக்கணிப்பதாகவும் குற்றம் சுமத்தியது.

ஆனால் ஆளும் ஐ. தே.கட்சிக்கு தென்னிலங்கையில் முக்கிய மாகாணங்களான மேல்மாகாணத்தையும் தென் மாகாணத்தையும் இழந்ததென்பது பெரும் அரசியல் பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது. அரசாங்கத்திற்கு இவை எரிச்சலூட்டுபவையாகவும் இருந்தன.

இந்நிலையில் அரசாங்கம் மாகாணங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் அல்லது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பறித்தெடுத்தல் என்ற ரீதியில் செயற்படத் தொடங்கியது.

இவ்வாறு மாகாண சபைகளில் எழுந்துள்ள அதிகாரப் போட்டியானது ஒரு புறம் ஜனநாயக அமைப்பிற்கும் சவால் விடும் அளவிற்கு நிலைமையைக் கொண்டு சென்றுள்ளது. தென்னிலங்கையில் உள்ள பிரதான மாகாணங்கள் இரண்டில் தற்பொழுது மாகாணசபை உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். இதுவரை கடத்தப்பட்டவர்கள்தொடர்பான எதுவித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை.

இவ் ஆட்கடத்தல் நடவடிக்கைகளின்பின்னணியில் ஐ தே கட்சி உள்ளது என்பதில சந்தேகப்பட ஏதுமில்லை. ஆனால் கடத்தல் நாடகம் என்பது வற்புறுத்தலின் அடிப்படையிலானதா, அன்றி கடத்தப்பட்டவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியும் சேர்ந்து நடிக்கும் நாடகமா என்பது குறித்து தெளிவான முடிவுகள் இது வரையில்லை.

இதே வேளைமறுவள, மாக மாகாண சபைகள் உருவாக்கியுள்ள அதிகாரப் போட்டியானது தென்னிலங்கை அரசியலில் கட்சிகளின் பிளவுகளும் புதிய கூட்டுக்களும் உருவாக வழி திறந்துள்ளதுபோன்றதொரு நிலையை உருவாக்கியுள்ளன. ஆனால், உண்மையில் இன்று எழுந்துள்ள அரசியல் நெருக்கடியானது இலங்கையில் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் போரும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எடுத்துள்ள தீவிர வலதுசாரிப் போக்கும் மற்றும் கட்சிகள் சிலவற்றுள் குறிப்பாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடும் முக்கிய காரணமாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆளும் கட்சி என்ற ரீதியில் அரசியலில் அனுபவித்துவரும் அனுகூலத்தின் அடிப்படையில் தனது முரண்பாடுகளை அது தற்பொழுது வெளிக்காட்டவில்லை என்றே கொள்ளலாம். ஆனாலும்,

## ஜெயராஜ்

டி. பி. விஜேதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை எடுத்துக் கொண்ட பின்னர் தீவிர வலதுசாரிப் போக்கைக் கைக்கொள்ளும் கட்சியாகவே அது மாறியுள்ளது. டி. பி. விஜேதுங்கவின் அரசியற் கொள்கைகளை. பௌத்த அடிப்படைவாதிகள் ஆதரிப்பதில் இருந்தும், டி. பி. விஜேதுங்கவை பலப்படுத்த வேண்டும் என அவர்கள் தமது நிலையை வெளிப்படுத்துவதில் இருந்துமே தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் தன் உள் முரண்பாட்டில் இருந்து விடுபட்டதாக தெரியவில்லை. சுதந்திரக் கட்சிக்குள் இருந்த வலதுசாரித் தலைமையான அனுரா பண்டார நாயக்கா ஐ. தே. கட்சியுடன் இணைந்து கொண்டமை இடதுசாரித் தன்மை சார்ந்த சிறிமாவோ பண்டார நாயக்கா, சந்திரிகா குமாரணதுங்கா ஆகியோரின் கைகளை பலப்படுத்தியுள்ளதாயினும் அனுராவிற்குப் பின்னால் செயற்பட்ட ஹெலஉறுமய போன்ற அடிப்படைவாதிகள் இன்னமும் பலம் பெற்றவர்களாகவும், கட்சித் தலைமையின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்பவர்களாகவும் தெரியவில்லை. இது அக்கட்சியைக் கணிசமான அளவில் பலவீனப்படுத்தக் கூடிய அம்சமாகவே உள்ளது

இந்நிலையில், தென்னிலங்கையில் ஐ தே க கொடுக்க முற்படும் தீவிர வலதுசாரித் தலைமையை எதிர்கொள்ளக் கூடிய வகையில், புதிய ஒரு வலதுசாரித் தலைமையினை அமைப்பது குறித்தும் தீவிரமாக எதிரணி வலதுசாரிகள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தலைமையில் தமது எதிர்ப்பணியை உருவாக்குவது குறித்தும் தீவிரமாகப் பரிசீலித்தும் வருகின்றனர்.

காமினி திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் நிலை, லலித் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தடுமாற்றமானதாகவே உள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுமக்கள முன்னணியுடன், மாகாண சபைகளில் தொடர்புகளைக் கொண்டிருப்பினும், தலைமைப்பீடம் வலதுசாரிப் போக்கில் நாட்டம் கொண்டமையானது அதன் தடுமாற்றம் நிரந்தரமானதாகவே உள்ளது. இருப்பினும், மத்திய மாகாண சபை ஆட்சிப் பொறுப்பை கைப்பற்ற அமைச்சர் தொண்டமானுடன் பேரம்பேச அக்கட்சியின் தலைமை முற்பட்டமையானது, மலையகத்தில், பல அரசியல்நெருக்கடிகளுக்குவித்திடுவதாகவே இருந்தது.

ஐ. தே. கவிற்குக் கிடைத்த டி. பி. விஜேதுங்கவின் வலதுசாரித் தலைமையானது சிங்கள அரசியற் கட்சிகளில் மட்டுமல்ல, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது இ. தொ. காங்கிரசும், அதன் தலைவர் தொண்டமானும் எப்பொழுதும் இரு முரண்பட்ட பாத்திர அமைப்புக்கள்தான். அதாவது முற்றிலும் தொழிலாளர்களையே கொண்ட ஒரு அமைப்பிற்கு தொண்டமான் போன்ற ஒரு முதலாளித்துவ தலைமை விசித்திரமானதுதான். இந்நிலையில், அமைச்சர் தொண்டமான் வகிக்கும் பாத்திரம் இரட்டைத்தன்மை பொருந்தியதாகவே இருந்து வருகின்றது.

இந்த வகையில் தான் இம்முறை டி.பி. விஜேதுங்க கடைப்பிடித்த தீவிர வலது சாரிப் போக்கானது அமைச்சர் தொண்டமான் இரு பாத்திரங்களிலும் ஒரே வேளை செயற்பட முடியாத நிலையை உருவாக்கியதெனலாம். இதன் காரணமாக டி.பி. விஜேதுங்கவின் அரசுடன் முரண்பட வேண்டிய நிலையை அவருக்கு ஏற்படுத்தியது.

ஆனால் தொண்டமான் விடயம் கிணறுவெட்டப் போய் பூதம் புறப்பட்டது போன்றதொரு நிலையையே உருவாக்கியது. இதில் கொள்கைகளுக்கு அப்பால் அரசியல் ஆதாயம்என்பது மட்டுமே செயற்பட்டது. இ. தொ. காவின் பொதுச்செயலாளர் செல்லச்சாமி தொண்டமானுக்கு எதிராகமேற்கொண்ட நடவடிக்கையானது, இ.தொ காவைப் பிளவுபடுத்தும் நிலையினையும் கொண்டு வந்துவிட்டுள்ளது எனலாம்.

இவ்வாறாக சிறிலங்காவில் உருவாகியுள்ள இவ் அரசியல் நெருக்கடியானது அடுத்த ஆண்டில் மேலும் விரிவடையும் வாய்ப்பே அதிகமாகவுள்ளது. அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என இரு தேர்தலை சிறிலங்கா சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் மத்தியில் ஆட்சியைக் கைப்பற்ற ஆளும் ஐ. தே. கட்சியும், எதிரணியினர் கூட்டாகவோ அன்றித் தனித்தோ ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றப் போட்டியிடுதல் தவிர்க்க முடியாதது.

ஆனால் இன்று மாகாண சபை ஆட்சியை கைப்பற்றுவதற்கு நடைபெறும். அதிகாரப் போட்டியானது. உருவாக்கியுள்ள அரசியல் நெருக்கடியை உற்று நோக்கும் போது அடுத்த வருடத் தேர்தலில் ஜனநாயக மரபுகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. 1988ஆம் ஆண்டு தேர்தல் போல் ஒரு இரத்தம் தோய்ந்த தேர்தலை சிறிலங்கா சந்திக்க வேண்டிய நிலையும் உருவாகலாம்.

# கடற்படைக்குப் பயந்து கடலில் குதித்தவர் மரணம்

சிறிலங்கா கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக கடலில் குதித்த மீனவர் கடற்சுழியில் அகப்பட்டுப் பலியானார்.

இச்சம்பவம்நேற்றுக்காலை 6.00மணியளவில் பூநகரி-கல்முனை, சின்னவேலிப் பகுதிக் கடலில் நடைபெற்றது.

அவருடன் சென்ற ஏனைய மீனவர்கள் நீந்திக் கரை வந்தனர். இறந்தவரின் சடலம் பின்னர் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். அரசினர் வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது

குருநகர், றெக்ளமேசன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த யோசெப் அன்ரனி பிரான்சிஸ் ( வயது 52 ) என்பவரே அவ்வாறு பலியானவர் ஆவார். (21)(17)

### திருமலை

இராணுவத்தால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் 400 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் நாசமடைந்துள்ளன.

இங்கு வைத்திய நிலையம் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் அப்பகுதிக்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் மருந்துகள் வழங்கப்பட்டுவந்தது. இதற்கும் சிறிலங்கா அரசு தடை விதித்துள்ளது. சிறிலங்கா அரசினதும், இராணுவத்தினரதும் இத் தடைகள் இன்றுடன் இருபத்தொரு நாட்களாகத் தொடர்ந்து நீடிக்கின்றன.

### தப்பி

க்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு பொலிசாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உதைபந்தாட்டம்

மருதனார்மடக் கோட்டப் பாடசாலைக்கிடையே நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் 19 வயது பிரிவினர்க்கான இறுதி உதைபந்தாட்டப் போட்டி யா/ சுன்னாகம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பி. ப. 2. 30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இப்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம்வடக்கு கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்கள் கலந்துகொள்கின்றார். சிறப்பு விருந்தினராக உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா கலந்துகொள்கின்றார்.

இறுதிப் போட்டியில் (19 வயதுப் பிரிவினர்) யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், யா/உரும்பராய் இந்துக் கல்லூரியும் கலந்துகொள்கின்றன.

# வெள்ளத்தில் தவறிவீழ்ந்த சிறுவன் பரிதாப மரணம்

(தென்மராட்சி)

தொடர்ந்து பெய்த கடும் மழையினால் ஏற்பட்டவெள்ளத்தினால் இடம்பெயர்ந்து கொடிகாமம் அரசினர் மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் வெள்ளத்தில் தவறி வீழ்ந்து மரணமானார்.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த குணரட்ணம் சுதாகரன் என்னும் சிறுவனே இவ்வாறு மரணமானார். இவர் இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியிருந்த வேளையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை அருகிலுள்ள புகையிரதப் பாதைக்குச் சென்றபோது அருகிலுள்ள குட்டையில் தவறிவீழ்ந்து மரணமாகியுள்ளார் இவரது பெற்றோர் தேடியும் காணாத நிலையில் புதன்கிழமை மாலை 6மணியளவில் அருகிலுள்ள குட்டையில் சடலமாக காணப்பட்டு மீட்கப்பட்டார். (86)

### தபால்கள்

புறப்பட்ட றுகுணு கப்பலில் பரீட்சைவிடைத்தாள்களோ, தபால் பொதிகளோ எடுத்துச்செல்லப்படவில்லை. 'வாதுவ' கப்பலில் அனுப்புவதற்கென கொண்டுசெல்லப்பட்ட தபால் பொதிகளும் பருத்தித்துறை தபாலகத்தில் தூங்கிக் கொண்டிருக்கின்றன. (யோ)

### பரீட்சை

லாம் என தெரிவிக்கப்பட்டது.

அதற்கும் எக்கப்பலில் எடுத்துவரப்பட வேண்டும் என்று பரீட்சை ஆணையாளரிடம் இருந்து அனுமதி கிடைத்தாலே எடுத்துச் செல்ல முடியுமென யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (பா)

# 'வெளிச்சம்' மார்கழி இதழ் இன்று வெளிவருகிறது

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்தவெளியீடான 'வெளிச்சம்' மார்கழி மாத இதழ் இன்று வெளிவருகின்றது. தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ''உறுதி பூண்ட மக்கள் விடுதலையை வென்றெடுப்பார்கள்'' என்ற கட்டுரையும், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் ப. புஸ்பரட்ணம் எழுதிய ''போராட்டக் களத்தில் பூநகரி - ஒரு வரலாற்றுப்பார்வை'' என்ற கட்டுரையும், ''நினைவழியா நாட்கள்'' கவிதை நூலுக்கான பேராசிரியர் அ சண்முகதாஸின் மதிப்பீட்டுரையும், சேயோனின் ''பூநகரியில் கிடைத்த தடயங்கள்'' கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. மற்றும் புதுவை இரத்தினதுரை, உதயலட்சுமி, மாலிகா, பிரமகதீஸ்வரி, அன்பழகன், உமா ஜிப்ரான், இத்தாவில் சிவராசா, நாக. சிவசிதம்பரம் ஆகியோரின் கவிதைகளும், நடராசா இராமலிங்கம், க. கலாமணி ஆகியோரின் சிறுகதைகளும், சு. மகேந்திரனின் மொழிபெயர்ப்புச் சிறுகதை ஒன்றும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுவரும் வெளிச்சத்தின் இருபத்தோராவது இதழ் இதுவாகும்.

---

### தோட்டத்

மாக இருந்துள்ளது.

கடத்தப்பட்டவர்களுள் மூவர் தொண்டமானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாம் ஆதரவு வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். இந்த மூவரும் தொண்டமானுக்கு ஆதரவளிக்கப்போகின்றனர் என்ற தகவல் ஏற்கனவே அரசிற்கு தெரிந்துள்ளது இதேவேளைமத்தியமாகாண சபையின் உபதலைவர் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டே மத்திய மாகாண சபையின் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த ஏழுபேரும் கடத்தப்பட்ட செய்தி பரவத் தொடங்கியதும் நுவரெலியா மாவட்டத்தின் சகல தோட்டத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இவ் வேலை நிறுத்தத்தில் சுமார் இரண்டுலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டதாக தெரியவந்துள்ளது

இதேவேளை ஹற்றன் தலவாக்கொல்லை, நானுஓயா, நுவரெலியா பகுதிகளின் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு இருந்தன. இவர்கள் தமது அங்கத்தவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியே இக் கடையடைப்பிலும் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபட்டனர்.

இவர்கள் மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் திஸநாயக்காவாலேயே தமது அங்கத்தவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் எனப் பகிரங்கமாகவே குற்றம் சாட்டினர்.

இவர்கள் இவ்வாறு வேலை நிறுத்தத்தில் குதிப்பதற்கு மத்திய மாகாண சபையின் உறுப்பினர்கள் என்பதைவிடத்தமது தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் என்பதே மேலோங்கியிருந்தது. இப்படியாக தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களே தொழிலாளர் காங்கிரசிலிருந்து தெரிவானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**23 - 12 - 93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11743

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

40-7583, 24-2944, 24-5886, 24-9830, 26-7252.

## வெற்றிடங்கள்

### கிராம அபிவிருத்தித் திணைக்களம்
### வடக்குக் கிழக்கு மாகாணசபை

**பதவி:**

1. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்.
2. தையற்பயிற்சி போதனாசிரியர்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 07.01.1994**

மேலதிக விபரங்கள், மாதிரி விண்ணப்பப்படிவம் ஆகியவை பற்றிய விபரங்களை சகல பிரிவுச் செயலர் அலுவலகங்களிலும் (உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்) யாழ். செயலக கிராம அபிவிருத்திக்கிளையிலும் பார்வையிடலாம்.

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையரும்,
யாழ். மாவட்டம்.

(சி-8208)

---

## அமரர் எம். ஜி. ஆர். நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

அமரர் எம் ஜி 'ஆரின் ஆறாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று காலை 8-00 மணி முதல் மலரஞ்சலிநிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுளளன. தாவடி எம். ஜி. ஆர். இல்லம், காளியம்மன் சனசமூக நிலையம் சிவசக்தி சனசமூக நிலையம், ஆகிய இடங்களில் உருவப் படங்களுக்கு மலரஞ்சலியும், 11-00 மணிக்கு குருநகர் எம். ஜி. ஆர் சிலைக்கு மாலை அணிவித்தல், சிறப்புரை என்பனவும், மாலை 4-00 மணிக்கு கொக்குவிலிலுள்ள சனசமூக நிலையத்தில் நினைவுப் பேருரையும் இடம்பெறும்.

---

### பட்டதாரி

சம்பளம் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு மேலதிகமாக 1989, 1990, 1991 ஆகிய ஆண்டுகளில் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாகவும், அவர்களின் நியமனக் கடிதங்களின் நிபந்தனைகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது. சம்பந்தப்பட்ட யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட ஆசிரியர்களிடம் இது சம்பந்தமான விபரங்களை யாழ். கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் சி. புலேந்திரன் கோரியுள்ளார்.

---

### 57 ஆயிரம்

5758 குடும்பங்களும், சங்கானையில் 6206 குடும்பங்களும், உடுவிலில் 4100 குடும்பங்களும் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளதாகவும் இவற்றுடன் கெற்பலி, நாவற்குழி ஆகிய அகதிமுகாம்களில் இருந்தும் வெள்ளத்தால் வெளியேறி சாவகச்சேரியில் மேலும் 1300 குடும்பங்கள் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கையை மட்டுமே உதவி அரசாங்க அதிபர்கள் சமர்ப்பித்துள்ளதாகவும் எவ்வளவு மக்கள் இடம்பெயர்ந்தார்கள் வீடுகள் மற்றும் சொத்திழப்புகள் பற்றிய மேலதிக விபரங்கள் எவையும் தெரியவில்லையென செயலக சமூக சேவை பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார் இப்பகுதிகளில் வெள்ளம் வடிந்த பின்னரே அவ்விபரங்கள் தெரிய வருமென தெரிவித்த அவர் குடாநாட்டில் உள்ள மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவும் மற்றவர்களுக்கு ஒரு வாரத்திற்கான உலர் உணவை வழங்கும் படியும் அரச அதிபர் சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். இவ் உலர் உணவை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை தமது கையிருப்பில் இருந்து வழங்கும்படியும் இயலாத பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு இவ்வுலருணவுப் பொருள்கள் செயலகத்தால் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்கு தேவையான சீமெந்து மற்றும் கட்டடப் பொருள்களை பெறுவதற்கான முயற்சிகளையும் அரச அதிபர் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

(சி)

---

### தம்மை

ரங்கமாக குற்றம் சாட்டியுள்ளனர். ஆயினும் இவர்களது குற்றச்சாட்டுக்கள் குறித்து ஐ தே கட்சியினர்எதுவித பதிலுமளிக்காது மௌனம் சாதித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட கலந்து கொண்டார்.

இதில் பிரான்சிஸ் கோவின் கடத்தல் ஐக்கிய தேசியக் கட்சியினரின் சதித்திட்டமே என முதலமைச்சர் தெரிவித்தார். பிரான்சிஸ்கோவின் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் கொலைப் பயமுறுத்தல் விடப்பட்டுள்ளது. இதனாலேயே அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்றார்.

மேலும் அண்மையில் பத்தேகம, காலி பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அனுராபண்டாரநாயக்கா பேசும்போது இன்னும் ஒருசில நாட்களில் தென்மாகாண சபையின் ஆட்சி ஐ. தே. கட்சியின் கையில் வந்துவிடும் எனக் கூறியுள்ளார். இதிலிருந்து இந்த கடத்தலின் சூத்திரதாரிகள் இவர்களே என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

தென்மாகாண சபையின் புதிய ஆளுநர்மூலம் சாதகமான முடிவு ஏதாவதுவருமா என நிருபர்கள் கேட்டபோது ஆளுநர் ஒரு நீதிபதி. ஆயினும் இவரது நியமனம் அரசியல் சார்புடையதாக இருப்பதால் அவர் இது விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்ளப் போகிறார்என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார்.

---

### செல்லச்சாமி

நம்பப்படுகிறது

இதன்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் முதல் முதலாக ஏற்பட்ட இந்த பிரிவு தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் இப் பிரிவின் சூத்திரதாரியாக செல்லச்சாமி இருப்பதாகவும் நம்பப்படுகிறது. இதனால் இவர் காங்கிரசின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்படலாம் அல்லது இவர் தானாகவே விலகுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### தென்மாகாண

ளார்.

நேற்றுதென்மாகாணசபையில் வரவு-செலவு வாக்கெடுப்பிற்கு விடப்பட இருந்ததும் அவ்வாறு வாக்கெடுப்பிற்கு விடப்படுமானால் அது ஒரு வாக்கினால் தோற்கடிக்கப் படும் நிலையும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் காலியில் கலவரங்கள்வெடிக்கும்அபாயமும்இருந்துவந்தது

---

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி கதிர்காமநாதன்

26-11-93 இல் வெளியான ஈழநாதத்தில் விளம்பரப்படுத்தப்பட்ட மரண அறிவித்தலில் 17-11-93-ல் திரு. க. யோகநாதன் (வழக்கறிஞர்) காலமானார் என்ற தகவல் தவறானது. உண்மையில் காலமானது அவரின் சகோதரர் கந்தசாமி கதிர்காமநாதன் ஆவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு.

தகவல்:
செ. புனிதவதி
(சகோதரி)

(சி-7008)

### தாமோதரம் சின்னராஜா

(இளைப்பாறிய கட்டடப் பொறியியலாளர் சிலோன் செறமிக்ஸ் கூட்டுத்தாபனம்)

தும்பளையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னராஜா அவர்கள் 21-12-1993 கொழும்பில் காலமானார். இவர் தாமோதரம், ராசம்மாவின் மகனும் சுசீலாவின் அன்புக் கணவரும். ரமேஷ் (ஜேர்மனி), வத்சலா, சுபத்ரா (ஜேர்மனி), அகல்யா, கஸ்தூரியின் அன்புத் தந்தையும், கமலதாஸ், வைத்திய நாதனின் மாமனாரும், பிரவீனின் பேரனும், நடராஜா, காலஞ்சென்ற துரைராஜா, மகேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சற்குணராஜா, ராஜேஸ்வரி, நவரத்தினராஜா, அமிர்தேஸ்வரி, குணேஸ்வரி, ஜெயராஜா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் சகோதரரும், வசந்தாதேவியின் மைத்துனரும், செல்லையா சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகனுமாவார். இறுதிக் கிரியைகள் 21-12-1993 மாலை கொழும்பில் நடைபெற்றது என்பதனை உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
சுசீலாதேவி
(மனைவி)

(7016)

### சேனாதிராசா தருமராசா

மாதகலை பிறப்பிடமாகவும் தற்போது மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா தருமராசா 23-12-1993 அன்று காலமானார். இவர் வே. சேனாதிராசா (இளைப்பாறிய அதிபர் மாதகல் மேற்கு அ. த. க வித்தியாலயம்) கமலேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வனும், திருமதி கருணராணி குமார், குகனேசன் (கனடா), சிவகணேசன் (கனடா), பத்மலோஜினி, சிவகுமார் (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரரும், சின்னத்துரை குமாரின் அன்பு மைத்துனரும், இராசலட்சுமியின் பெறாமகனும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
நா. வ. கந்தசாமி
(மாதகல்)

(7020)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.